தினபூமி
thinaboomi.com
பூமி: 30 சுற்று: 229 ஆடி 10
Regd. No.CBE/090/2011-2013
கோவை, சனி, ஜூலை 26, 2025
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



## பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்த பிரான்ஸ் அதிபருக்கு இஸ்ரேல், அமெரிக்கா கண்டனம்

.2-ம் பக்கம்

## 2-வது நீண்ட கால பிரதமர்: இந்திராகாந்தியின் சாதனையை முறியடித்தார் பிரதமர் மோடி

...3-ம் பக்கம்

## அதிக டெஸ்ட் அரைசதங்கள்: தோனியின் சாதனையை முறியடித்தார் ரிஷப் பண்ட்

...6-ம் பக்கம்





● சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் சென்னை மேற்கு மாவட்டத்தில் பகுதி, வட்ட, பாக புதிய நிர்வாகிகள் அறிமுகம் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு பேசிய காட்சி. இதில் எம்.பி. தயாநிதிமாறன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### வாக்காளர்கள் சிறப்பு திருத்த விவகாரம்:

# நெருப்புடன் விளையாட வேண்டாம்; முதல்வர் ஸ்டாலின் எச்சரிக்கை

## பீகாரில் 65 லட்சம் பேர் நீக்கத்திற்கு கடும் கண்டனம்

சென்னை, ஜூலை 26-

**வாக்காளர்கள் சிறப்பு திருத்தம் பா.ஜ.க.வுக்கு ஆதரவாக உள்ளது என கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் நெருப்புடன் விளையாடதீர்கள் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும் பீகாரில் 65 லட்சம் வாக்காளர்களை நீக்கியதற்கு முதல்வர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



**தேர்தல் ஆணையம்....**

பீகாரில் உள்ள 7.9 கோடி வாக்காளர்களில் 65 லட்சம் வாக்காளர்கள் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். இறப்பு, இடம் பெயர்ந்தவர்கள், மற்றும் இரு இடங்களில் பதிவு என மொத்தம் 65.2 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தகவல் தெரிவித்துள்ளது.

வரைவு வாக்காளர் பட்டியல் ஆகஸ்ட் 1-ம் தேதி வெளியிடப்படும் என்றும், அதில் தகுதியுள்ள அனைவரும் சேர்க்கப்படுவார்கள் எனவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**முதல்வர் கண்டனம்...**

இந்த நிலையில், வாக்காளர்களை நீக்கியதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"சிறப்பு தீவிர திருத்தம் தவறாகப் பயன்படுத்தப்பட்டு, பின்தங்கிய மற்றும் கருத்து வேறுபாடு கொண்ட சமூகங்களின் வாக்காளர்களை அமைதியாக அழிக்கவும், பா.ஜ.க.வுக்கு ஆதரவாக செயல்படுவதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

இது சீர்திருத்தம் பற்றியது அல்ல. இது விளைவுகளைப் பற்றியது.

இது ஒரு மாநிலத்தின் பிரச்சனை அல்ல, குடியரசின் அடித்தளம் பற்றியது.

**எங்களை நீக்க முயற்சி**

எங்களை தோற்கடிக்க முடியாவிட்டால், நீங்கள் எங்களை நீக்க முயற்சிக்கிறீர்கள். நெருப்புடன் விளையாடாதீர்கள். நமது ஜனநாயகத்திற்கு ஏற்படும் எந்தவொரு அச்சுறுத்தலும் உறுதியான எதிர்ப்பை எதிர்கொள்ளும். தமிழ்நாடு முழு பலத்துடன் குரல் எழுப்பும்.

இந்த அநீதியை நம்மிடம் உள்ள அனைத்து ஜனநாயக ஆயுதங்களையும் பயன்படுத்தி எதிர்த்துப் போராடுவோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தூத்துக்குடி விமான நிலையத்தின்

# புதிய முனையத்தை இன்று திறந்து வைக்கிறார் பிரதமர் நரேந்திரமோடி

தூத்துக்குடி, ஜூலை 26-

**ரூ.400 கோடியில் விரிவாக்கம் செய்யப்பட்ட தூத்துக்குடி விமான நிலையத்தின் புதிய முனையத்தை இன்றுபிரதமர் நரேந்திரமோடி திறந்து வைக்கிறார். மேலும் ரூ.1,030 கோடியில் நிறைவடைந்த ரெயில்வே திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.**

அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்தை தலைமையிடமாக கொண்டு ஆட்சிபுரிந்த மாமன்னன் ராஜேந்திர சோழனின் பிறந்தநாள் ஆடித்திருவாதிரை விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி தமிழக அரசு சார்பில் நேற்று முன்தினம் கங்கை கொண்ட சோழபுரத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதைத்தொடர்ந்து மத்திய அரசு கலாசார அமைச்சகத்தால் இந்த ஆடித் திருவாதிரை விழா 27-ந் தேதி வரை கொண்டாடப்பட உள்ளது. இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். இதற்காக பிரதமர் மோடி இன்று தமிழகம் வருகிறார். கேரளாவில் இருந்து இன்று இரவு 7.50 மணிக்கு பிரதமர் மோடி தூத்துக்குடி விமான நிலையம் வருகிறார்.

அங்கு இரவு 8.30 மணி முதல் 9.30 மணி வரை நடைபெறும் நிகழ்ச்சியில் தூத்துக்குடி விமான நிலையத்தின் புதிய முனையம் மற்றும் முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைக்கிறார். பின்னர் அங்கிருந்து விமானத்தில் புறப்பட்டு இரவு 10.35 மணியளவில் திருச்சி விமான நிலையத்திற்கு செல்கிறார்.

அங்குள்ள அரசினர் விடுதியில் இரவில் தங்கி ஓய்வு எடுக்கிறார். பின்னர் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஹெலிகாப்டரில் அரியலூரில் உள்ள கங்கை கொண்ட சோழபுரத்திற்கு செல்கிறார். அங்கு நடைபெறும் 'ரோடு ஷோ'வில் கலந்து கொள்ளும் பிரதமர் மோடி நடந்து சென்று மக்களை சந்திக்கிறார்.

இதையடுத்து பிரகதீஸ்வரர் கோவிலுக்கு பிரதமர் மோடி செல்கிறார். பின்னர் பிரதமர் மோடி வாரணாசியில் இருந்து கொண்டு வரும் கங்கை நீரை கொண்டு பிரகதீஸ்வரருக்கு மகா அபிஷேகம் நடைபெறுகிறது. சாமி தரிசனம் செய்யும் பிரதமர் மோடி கோவிலில் அமர்ந்து சில நிமிடங்கள் தியானம் செய்ய உள்ளார். மேலும், கோவில் சிற்பங்களையும், தொல்லியல் துறை சார்பில் அமைக்கப்படும் புகைப்பட கண்காட்சியையும் பார்வையிடுகிறார்.

பின்னர், அங்கு நடைபெறும் விழாவில், ராஜேந்திர சோழன் நினைவு நாணயத்தை பிரதமர் மோடி வெளியிடுகிறார். பின்னர் இசையமைப்பாளர் இளையராஜாவின் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது. மதியம் சுமார் 1.30 மணியளவில் கோவிலில் இருந்து பிரதமர் மோடி ஹெலிகாப்டரில் புறப்பட்டு திருச்சிக்கு செல்கிறார். அங்கிருந்து 2.30 மணியளவில் விமானம் மூலம் டெல்லிக்கு புறப்படுகிறார்.

தமிழகம் வரும் பிரதமர் மோடி ரூ.1,030 கோடியில் நிறைவடைந்த ரெயில்வே திட்டங்களை தொடங்கி வைக்கிறார் என்று தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதன்படி, மதுரை-போடிநாயக்கனூர் இடையேயான 90 கிலோ மீட்டர் தூரத்திற்கு மின்மயமாக்கப்பட்ட ரெயில் பாதை, நாகர்கோவில் டவுண்-கன்னியாகுமரி பிரிவில் 21 கிலோ மீட்டர் நீள இரட்டை ரெயில் பாதை, ஆரல்வாய்மொழி-நாகர்கோவில் சந்திப்பு இடையே 12.87 கிலோ மீட்டர் நீள வழித்தடம், நெல்லை- மேலப்பாளையம் இடையே 3.6 கிலோ மீட்டர் நீள இரட்டை ரெயில் பாதை ஆகியவற்றை பிரதமர் மோடி இன்று (சனிக்கிழமை) திறந்து வைக்கிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடி வருகையையொட்டி தமிழகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# மருத்துவ படிப்புக்கான தரவரிசை பட்டியல் வெளியீடு

## நெல்லை மாணவன் முதலிடம்

சென்னை, ஜூலை 26-

**எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., மருத்துவப் படிப்புகளுக்கான தரவரிசைப் பட்டியலை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார். நெல்லை மாணவன் சூர்ய நாராயணன் முதலிடம் பிடித்தார்.முதற்கட்ட கலந்தாய்வு ஜூலை 30ல் துவங்குகிறது.**

**தரவரிசை பட்டியல்**

1) சூர்ய நாராயணன் (நெல்லை)- முதலிடம்.
2) அபினீத் நாகராஜ் (சேலம்) - 2-ம் இடம்.
3) ஹருதிக் விஜயராஜா (சேலம்) - 3ம் இடம்.
4) ராகேஷ் (திருவள்ளூர்) - 4-வது இடம்.



● 2025-2026-ம் ஆண்டிற்கான இளநிலை மருத்துவம், பல் மருத்துவம், மருத்துவம் சார்ந்த பட்டப்படிப்புகளுக்கான தகுதி பெற்ற மாணவர்களின் தரவரிசை பட்டியலினை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார்.

எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., மருத்துவப் படிப்புகளுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்ட பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிருபர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் மருத்துவப் படிப்புகளுக்கான முதற்கட்ட கலந்தாய்வு ஜூலை 30ல் துவங்குகிறது.

எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., படிப்புகளுக்கு 72,743 மாணவ, மாணவிகள் விண்ணப்பித்துள்ளனர். மருத்துவ படிப்பில் சேர 7.5 சதவீத இட ஒதுக்கீட்டில் 4,281 விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், 4,062 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டுள்ளது. அரசு ஒதுக்கீட்டில் மருத்துவ இடங்களில் சேர 43,315 பேர் விண்ணப்பித்து இருந்தனர். இதில், 39,853 பேரின் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு உள்ளது.

### புதிய மாநிலங்களவை உறுப்பினராக

# தமிழகத்தை சேர்ந்த 4 பேர் பதவியேற்பு

புதுடெல்லி, ஜூலை 26-

**மாநிலங்களவை உறுப்பினராக மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் உட்பட தமிழகத்தைச் சேர்ந்த 4 பேர் நேற்று (வெள்ளிக்கிழமை) பதவியேற்றனர்.**



தமிழகத்தில் இருந்து மாநிலங்களவை எம்.பி.க்களாக இருந்த திமுக வழக்கறிஞர் வில்சன், தொமுச தலைவர் சண்முகம், எம்.எம்.அப்துல்லா மற்றும் தி.மு.க. கூட்டணி சார்பில் தேர்வான ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவின் பதவிக் காலமும், அதிமுக ஆதரவுடன் தேர்வான பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் மற்றும் அ.தி.மு.க.வின் சந்திரசேகர் ஆகிய 6 பேரின் பதவிக் காலம் நேற்று முன்தினம் (ஜூலை 24) நிறைவடைந்தது.

அவர்களுக்குப் பதில் புதிய உறுப்பினர்களாக 6 பேர் ஏற்கனவே போட்டியின்றி தேர்வாகினர். அவர்களில், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல் ஹாசன், திமுகவைச் சேர்ந்த ராஜாத்தி(கவிஞர் சல்மா), எஸ்.ஆர். சிவலிங்கம், பி.வில்சன் ஆகிய 4 பேர் இன்று மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்றனர்.

இதையடுத்து, அவர்கள் அனைவரும் அவையை நடத்தி வரும் துணைத் தலைவர் ஹரிவன்ஷிடம் வாழ்த்து பெற்றனர்.

"மாநிலங்களவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் கமல்ஹாசன் எனும் நான், சட்டத்தினால் நிறுவப்பட்டதான இந்திய அரசியல் சட்டத்தின் மீது உண்மையான பற்றார்வமும், பற்றுறுதியும் கொண்டிருப்பேன் என்றும் இந்தியாவின் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் உறுதியாக பற்றி நிற்பேன் என்றும் நான் இப்போது ஏற்க இருக்கும் கடமையினை நேர்மையாக நிறைவேற்றுவேன் என்றும் விழுமிய முறைமையுடன் உறுதிகூறுகிறேன்" என தமிழில் உறுதிமொழி வாசித்து பதவியேற்றுக்கொண்டனர். மற்றவர்களும் பதவியேற்றுக்கொண்டனர்.

இதையடுத்து, கேள்வி நேரம் தொடங்கியது. எனினும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளி காரணமாக அவை நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது. அவை திங்கள்கிழமை காலை 11 மணிக்கு மீண்டும் கூடும். இதேபோல், மக்களவையும் எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

### ஜூலை 28, 29-ம் தேதிகளில்

# 'ஆபரேஷன் சிந்தூர்' குறித்து பாராளுமன்றத்தில் விவாதம்

புதுடில்லி, ஜூலை 26-

**' ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை பற்றி ஜூலை 28ல் லோக்சபாவில் 16 மணி நேரமும், ஜூலை 29ல் ராஜ்யசபாவில் 16 மணி நேரமும் விவாதிக்கப்படும் என்று மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.**

பீகாரின் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம், பஹல்காம் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர், டிரம்பின் போர் நிறுத்த அறிவிப்பு உள்ளிட்ட பல விவகாரங்கள் குறித்து பார்லிமென்டின் இரு அவைகளிலும் விவாதிக்க எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வருகின்றன.

எதிர்க்கட்சிகள் அமளி மற்றும் கூச்சல், குழப்பத்தால் பார்லிமென்ட் அலுவல்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. கூட்டத்தொடர் தொடங்கிய நாள் முதல் தினமும், எதிர்க்கட்சிகள் அமளியால் அவை நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டன. இன்றைய அலுவலும் பாதிக்கப்பட, இரு அவைகளும் திங்கட்கிழமை முற்பகல் 11 மணி ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந் நிலையில், எதிர்க்கட்சிகளின் அமளிக்கு முற்றுப் புள்ளி வைக்கும் விதமாக, மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ இன்று டில்லியில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது;

பீகார் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம், பஹல்காம் தாக்குதல், 'ஆபரேஷன் சிந்தூர்' குறித்து எதிர்க்கட்சிகள் பிரச்னைகளை எழுப்பி உள்ளன. பார்லிமென்ட்டில் ஏற்படும் இடையூறு காரணமாக மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

அனைத்து பிரச்னைகளையும் ஒன்றாக விவாதிக்க முடியாது. பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் மற்றும் 'ஆபரேஷன் சிந்தூர்' ஆகியவற்றுக்கு மத்திய அரசின் பதில் குறித்து சிறப்பு அமர்வுக்கு நாங்கள் தயாராக உள்ளோம்.

இன்று லோக்சபா சபாநாயகர் ஓம் பிர்லா, அலுவல் ஆலோசனைக் குழுவை அழைத்து 'ஆபரேஷன் சிந்தூர்' குறித்த விவாதத்திற்கு நாங்கள் தயாராக உள்ளோம் என்று மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

முதலில் 'ஆபரேஷன் சிந்தூர்' பற்றி விவாதிக்கப்படும் என்று நாங்கள் அவர்களிடம் (எதிர்க்கட்சிகள்) கூறி உள்ளோம். அதன் பின்னர் எந்தெந்த பிரச்னைகள் குறித்து விவாதிக்கப்படும் என்பதை நாங்கள் முடிவு செய்வோம்.

' ஆபரேஷன் சிந்தூர்' குறித்து திங்கட்கிழமை (ஜூலை28) லோக்சபாவில் 16 மணி நேரமும், செவ்வாய்கிழமை (ஜூலை 29) ராஜ்யசபாவில் 16 மணி நேரமும் விவாதிக்கப்படும். எந்த சந்தேகத்துக்கும் இடமில்லை. நீதிபதி யஷ்வந்த் வர்மாவை நீக்குவதற்கான நடவடிக்கைகள் லோக்சபாவில் தொடங்கும்.

## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| -721.08 | -225.10 |
| பாயிண்ட் 81,463.09 | பாயிண்ட் 24,837.00 |




**தங்கம்**
1 சவரன் ₹73,680
1 கிராம் ₹9,210



**வெள்ளி**
1 கிலோ ₹128,000
1 கிராம் ₹128.00

**டாலர்** ₹86.46

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



### பாலஸ்தீனத்தை தனி நாடாக
# அங்கீகரித்த பிரான்ஸ் அதிபருக்கு இஸ்ரேல், அமெரிக்கா கண்டனம்

**பாரிஸ், ஜூலை 26-**
ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிப்பதாக பிரெஞ்சு அதிபர் இம்மானுவேல் மேக்ரோன் கூறினார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்ட பதிவில், "மத்திய கிழக்கில் ஒரு நீதியான மற்றும் நீடித்த அமைதிக்கான வரலாற்று உறுதிப்பாட்டை அங்கீகரிக்கும் விதமாக பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க பிரான்ஸ் முடிவு செய்துள்ளது" என்று மேக்ரோன் கூறினார். அடுத்த செப்டம்பரில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் இந்த அறிவிப்பை வெளியிடுவேன் என்றும் அவர் உறுதிப்படுத்தினார். இதன்மூலம் ஐரோப்பாவின் மிகப்பெரிய யூத மற்றும் முஸ்லிம் சமூகங்களைக் கொண்ட பிரான்ஸ், பாலஸ்தீன அரசை அங்கீகரித்த முதல் பெரிய மேற்கத்திய நாடாக மாறும்.

இந்நிலையில் பிரான்சின் அறிவிப்புக்கு இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு கூறுகையில், அத்தகைய நடவடிக்கை பயங்கரவாதத்திற்கு வெகுமதி அளிப்பதாகவும், மற்றொரு ஈரானிய 'பினாமியை' உருவாக்கும் அபாயத்தை அதிகரிப்பதாகவும் கூறினார். அமெரிக்க வெளியுறவு செயலாளர் மார்கோ ரூபியோவும் பிரான்சின் முடிவுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

# மணிப்பூரில் ஜனாதிபதி ஆட்சி மேலும் 6 மாதங்கள் நீட்டிப்பு

**இம்பால், ஜூலை 26-**
மணிப்பூரில் ஜனாதிபதி ஆட்சி மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

மணிப்பூரில், இரு சமூகத்தினர் இடையே ஏற்பட்ட வன்முறை காரணமாக அங்கு கடந்த பிப்ரவரி மாதம் ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டது. இந்த நிலையில், அங்கு இன்னும் இயல்பு நிலை திரும்பாத சூழலால், ஜனாதிபதி ஆட்சி மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, மக்களவையில் கொண்டு வந்த தீர்மானத்தின் அடிப்படையில் இந்த கால நீட்டிப்பு வரும் ஆகஸ்ட் 13ம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிலிப்பைன்ஸ்: புயலுக்கு 25 பேர் பலி

**மணிலா, ஜூலை 26-**
பிலிப்பைன்ஸ் புயலில் 25 பேர் பலியாகி உள்ளனர்.

ஆசியாவில் அமைந்துள்ள நாடு பிலிப்பைன்ஸ். இந்நாட்டை கொமெ என்ற புயல் தாக்கியது. குறிப்பாக, அந்நாட்டின் பங்கசினான் மாகாணம் அக்னோ நகர் புயலால் கடுமையான பாதிப்பை சந்தித்தது. சூறாவளி காற்றுடன், கனமழையும் கொட்டித்தீர்த்தது. மணிக்கு 120 முதல் 165 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசியது. கனமழையால் நகரின் பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. சாலை போக்குவரத்து, மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும், 2 லட்சத்து 78 ஆயிரம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பிலிப்பைன்சை தாக்கிய புயலால் ஏற்பட்ட கனமழை, வெள்ள, நிலநிச்சரிவு போன்ற இயற்கை பேரிடர்களில் சிக்கி இதுவரை 25 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

### பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் பிறந்தநாள்:
# முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை, ஜூலை 26-**
பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ராமதாஸின் பிறந்த நாளை முன்னிட்டு, அவருக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின், தமிழக காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.



முதல்வர் ஸ்டாலின்: பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ராமதாஸுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள். நீண்ட ஆயுளோடு, தங்களது பொது வாழ்க்கைப் பயணம் தொடர வேண்டுமென விழைகிறேன்.

செல்வப்பெருந்தகை: தமிழ்நாட்டின் மூத்த அரசியல்வாதியும், பாமக நிறுவனருமான ராமதாஸுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள். உங்கள் பிறந்த நாளில் நலமும் வளமும் சூழ விரும்புகிறேன். நீண்ட ஆயுளுடன், நல்ல ஆரோக்கியம், மக்கள் சேவையில் மென்மேலும் சிறந்து விளங்கிட விழைகிறேன்.

டி.டி.வி. தினகரன்: பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனரும், மூத்த அரசியல்வாதியுமான ராமதாஸுக்கு எனது மனமார்ந்த பிறந்த நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கொண்ட கொள்கையில் துளியளவும் சமரசமின்றி அரசியல் களத்தில் பயணிக்கும் மருத்துவர் ஐயா ராமதாஸ் அவர்கள் பூரண உடல்நலத்தோடும், நீண்ட ஆயுளோடும் தொடர்ந்து மக்கள் பணியாற்ற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இதனிடையே, அதிமுக பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., ராமதாஸை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# கோடீஸ்வரர் பட்டியலில் கூகுள் சி.இ.ஓ. சுந்தர் பிச்சை

**நியூயார்க், ஜூலை 26-**
கூகுள் சி.இ.ஓ. சுந்தர் பிச்சை முன்னணி கோடீஸ்வரர் பட்டியலில் இடம்பிடித்தார்.



கூகுள் நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரியாக இருந்து வருபவர் சுந்தர் பிச்சை. தமிழ்நாட்டில் ஒரு நடுத்தர குடும்பத்தை சேர்ந்த இவர் 2004-ம் ஆண்டு கூகுள் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார். படிப்படியாக முன்னேறிய அவர் கூகுளின் ஆண்ட்ராய்டு பிரிவை வழிநடத்தினார். அந்த நிறுவன வளர்ச்சியில் இவரது பங்கு மிக சிறப்பானது. இவரது திறமையால் 2015-ம் ஆண்டு கூகுள் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக பொறுப்பேற்றார்.

இந்த பதவிக்கு வந்து தற்போது அவர் 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். இந்த நிறுவனத்தில் மிக நீண்ட காலம் உயர் பதவியை சுந்தர் பிச்சை வகித்து வருகிறார். சுந்தர் பிச்சை பொறுப்பேற்றது முதல் தற்போது வரை கூகுள் நிறுவனத்தின் பங்குகள் 400 சதவீதத்துக்கும் மேல் உயர்ந்தது. 2023-ம் ஆண்டு முதல் நிறுவனத்தின் சந்தை மதிப்பு 1 டிரில்லியன் டாலருக்கும் (இந்திய மதிப்பில் சுமார் 86.5 லட்சம் கோடி) அதிகமான உள்ளது. குறிப்பாக செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) துறையில் கூகுள் அடைந்த முன்னேற்றம் நிறுவனத்தின் பங்குகளை அசுர வேகத்தில் உயர்த்தியது. இதன் காரணமாக இந்த நிறுவனத்தின் பங்குகள் எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. முதலீட்டாளர்களுக்கும் 120 சதவீதத்துக்கும் மேலான வருமானத்தை இது வழங்கி உள்ளது.

கூகுள் நிறுவனத்தின் இந்த பிரமாண்ட வளர்ச்சி சுந்தர் பிச்சையை பில்லியனர் அந்தஸ்துக்கு உயர்த்தி உள்ளது. ப்ளூம் பெர்க் அறிக்கையின் படி சுந்தர் பிச்சையின் சொத்து மதிப்பும் 1.1 பில்லியன் (இந்திய மதிப்பில் ரூ.9 ஆயிரம் கோடி) டாலராக உயர்ந்து உள்ளது. மேலும் போர்ப்ஸ் பில்லியனர்கள் பட்டியலும் சுந்தர் பிச்சையின் நிகர மதிப்பு ரூ. 1.2 பில்லியனாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மிகப்பெரிய கோடீசுவரர் பட்டியில் சுந்தர் பிச்சை இடம் பிடித்து உள்ளார். ஒரு நிறுவனத்தின் நிறுவனராக இல்லாத தலைமை நிர்வாக அதிகாரி ஒருவர் பில்லியனர் ஆவது என்பது மிகவும் அரிதான சாதனையாகும். இந்த சாதனையை சுந்தர் பிச்சை நிகழ்த்தி தமிழரின் பெருமையை உலகெங்கும் நிலைநாட்டி உள்ளார்.

### தென்பசிபிக் பெருங்கடல் பகுதியில் உள்ள
# சமோவா நாட்டில் பயங்கர நிலநடுக்கம்

**ஆப்பியா, ஜூலை 26-**
தென்பசிபிக் பெருங்கடல் பகுதியில் உள்ள சமோவா நாட்டில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

தென் பசிபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள தீவு நாடு சமோவா. இந்நாட்டில் நேற்று பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆப்பியாவின் தென்கிழக்கே 400 கிலோ மீட்டர் தொலைவில் 314 கிலோமீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 6.6 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் அதிர்ந்தன. இந்த நிலநடுக்கத்தில் உயிரிழப்பு சம்பவங்கள் எதுவும் ஏற்படவில்லை என தகவல் வெளியாகியுள்ளது. அதேபோல், நிலநடுக்கத்தை தொடர்ந்து சமோவா தீவிற்கு சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. 2009ம் ஆண்டு சவோவா தீவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுனாமி அலைகள் தாக்கின. இந்த சம்பவத்தில் சவோவா தீவில் 192 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.


**மரம் மனிதனின் உரம்**

# தங்கம் விலை 2 நாளில் மட்டும் ரூ.1,360 சரிவு

**சென்னை, ஜூலை 26-**
சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை 2வது நாளாக நேற்றும் குறைந்து விற்பனையானது.22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.360 குறைந்து ஒரு சவரன் ரூ.73,680க்கு விற்பனையானது.

சர்வதேச நிலவரங்களால் இந்த ஆண்டு துவக்கத்தில் இருந்து, நம் நாட்டில் தங்கம், வெள்ளி விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கடந்த இரு தினங்களுக்கு முன்பு ரூ.75 ஆயிரத்தை கடந்து விற்பனையானது.நேற்று முன்தினம் ரூ.1,000 குறைந்து காணப்பட்ட தங்கம் விலை, 2வது நாளாக நேற்றும் குறைந்து விற்பனையானது. இரு நாட்களில் ரூ.1,360 குறைந்திருப்பது இது ஆபரண பிரியர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நேற்று (ஜூலை 25) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.360 குறைந்து ஒரு சவரன் ரூ.73,680க்கு விற்பனையானது. கிராமுக்கு ரூ.125 குறைந்து, ஒரு கிராம் ரூ.45 சரிந்து, ரூ.9,210க்கு விற்பனையானது.

**26-07-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எல்லாவற்றிலும், எல்லோரையும் சந்தேகப்படும் குணம் ஏற்படும். மனக் கவலை மற்றும் சந்தோஷமற்ற வாழ்க்கை அமையும். பயந்த நிலையும் ஏற்படும்.

**ரிஷபம்:-** மனதில் தைரியமும், புதிய தகவல்கள் புதிய உற்சாகம் பிறக்கும். மனையாளின் ஒத்துழைப்பு மன மகிழ்ச்சி தரும். பலவகையிலும் பணவரவு அதிகரிக்கும். வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மிதுனம்:-**மாளிக்க முடியாத செலவுகள் ஏற்படும். வார்த்தைகளைக் கட்டுப்படுத்தவும். வண்டி, வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கையுடன், வேகத்தை குறைத்து விவேகமாக நடந்தால் விபத்தை தவிர்க்கலாம்.

**கடகம்:-** உங்கள் குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். புத்தாடை அணிகலன்கள் ஆகியவற்றை அணிவார்கள், பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும். எதையும் துணிச்சலுடன் எதிர் கொள்வீர்கள்.

**சிம்மம்:-** நாவை அடக்க வேண்டிய நாள். வம்புக்கு செல்லாது இருப்பதே சுகம். பெண்களால் தேவையற்ற விரயச் செலவுகள் ஏற்படும். குறிக்கோளின்றி மனம் போன போக்கில் அலைய நேரும்.

**கன்னி:-** பலவகைகளில் பணவரவு வரும் நாள். பெண்களால் இலாபமும், போகமும் கிடைக்கப் பொங்கும் மகிழ்ச்சி. குழந்தைகள் கல்வியில் சிறந்து விளங்கி உயர்வு நிலை அடைவர். அதன் காரணமாக தங்கள் மனதில் மகிழ்ச்சி நிலவும்.

**துலாம்:-** உடன்பிறப்புகளால் அதிக உதவி உண்டு. சுகம், சந்தோஷம், உல்லாசமான சுற்றுலாப் பயணங்கள் ஆகியவை ஏற்படும். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**விருச்சிகம்:-** தெய்வீக காரியங்கள் ஈடேறும். யாவற்றிலும் எளிதில் வெற்றி கிடைக்கும். பணவரவால் மனம் பரவசப்படும் நாள். ஆடை ஆபரணங்கள், அலங்காரப் பொருட்கள் சேரும். உறவினர் உதவியால் உள்ளம் மகிழும்.

**தனுசு:-** எந்த விஷயத்திலும் நியாயமாக நடக்க வேண்டிய நாள். மனைவியின் கலகத்தால், மற்றவர்கள் பகை ஏற்படும். அக்கம் பக்கத்தினருடன் அன்பாகப் பழகவும். அதிகாரிகளிடம் பணிவாக நடத்தல் அவசியம்.

**மகரம்:-** காதல் ஈடுபாட்டால் கவலைகளை மறந்து களிப்படைவீர்கள். அரசாங்க ஆதரவு மற்றும் உதவிகள் தடையின்றி கிடைக்கும். பயணங்கள் இனிமை தரும். கவனமாகப் படித்து கல்வியில் வெற்றிகளைக் குவிக்கும் நிலை ஏற்படும்.

**கும்பம்:-** எல்லா வளமும் பெறும் இனிய நாள். உல்லாசப் பயணங்கள் மூலம் உள்ளம் மகிழும். புதுப்பெண்கள் சிநேகமும், தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள் குதுகலமாய் நிறைவேறும்.

**மீனம்:-** பயணங்கள் மற்றும் செயல்பாடுகளில் தடைகள் ஏற்படலாம். வெற்றிக்கு வழி இல்லாத வகையில் வேதனைகளும் ஏற்படும். கட்டுக்கு அடங்காத செலவுகள் ஏற்படும். களவு போவதினால் மனச்சங்கடங்கள் ஏற்படும்.

# பிரதமர் மோடியின் வெளிநாட்டு சுற்றுப்பயண செலவு ரூ.295 கோடி

**புதுடெல்லி, ஜூலை 26-**
பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயண செலவு 4 ஆண்டுகளில் ரூ.295 கோடி என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டு பயணங்கள் மற்றும் அதற்கான செலவினங்கள் குறித்து நாடாளுமன்ற மாநிலங்களவையில் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு மத்திய வெளியுறவுத்துறை இணை மந்திரி கீர்த்தி வர்தன் சிங் எழுத்து மூலம் பதிலளித்தார்.

கடந்த 2021-ம் ஆண்டு முதல் 2024 வரை பிரதமர் மோடி மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்களுக்கான செலவு சுமார் ரூ.295 கோடி என தெரிவித்து இருந்தார். மேலும் இந்த ஆண்டு அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் உள்பட 5 நாடுகளுக்கு அவர் மேற்கொண்ட பயணங்களுக்கு ஆன செலவு ரூ.67 கோடி எனவும், மொரீஷியஸ், சைப்ரஸ், கனடா, குரேஷியா, கானா, டிரினிடாட்-டொபாகோ, அர்ஜென்டினா, பிரேசில், நமீபியா போன்ற நாடுகளுக்கு இந்த ஆண்டு அவர் மேற்கொண்ட பயணச் செலவு குறித்த விவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை என்று அதில் கூறப்பட்டு உள்ளது. இந்தப் பயணங்களில், மிகவும் அதிகமானது பிரான்சுக்கு ரூ.25 கோடிக்கு மேல் செலவானது என்றும், அதே நேரத்தில் ஜூன் 2023 இல் மோடி அமெரிக்காவிற்கு மேற்கொண்ட பயணத்திற்கு ரூ.22 கோடிக்கு மேல் செலவானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பா.ம.க. கட்சியின் பரப்புரை பாடலை வெளியிட்டார் அன்புமணி ராமதாஸ்

**சென்னை, ஜூலை 26-**
பா.ம.க. கட்சியின் பரப்புரை பாடலை அன்புமணி ராமதாஸ் வெளியிட்டார்.

பா.ம.க. தலைமை நிலையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் சமூகநீதிக்கு எதிரான, மக்களை வாட்டி வதைக்கக் கூடிய, மக்களின் துயரங்களைத் துடைக்காமல் விளம்பர மோகத்தில் மகிழ்ச்சியடையும் திமுக அரசை அகற்ற வேண்டும் என்ற நோக்கத்துடனும், இந்திய அரசியலமைப்பு சட்டத்தால் அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும் 1. சமூக நீதிக்கான உரிமை, 2. வன்முறையில்லா வாழ்வுக்கான மகளிர் உரிமை, 3. வேலைக்கான உரிமை, 4. விவசாயம் மற்றும் உணவுக்கான உரிமை , 5. வளர்ச்சிக்கான உரிமை, 6. நல்லாட்சி மற்றும் அடிப்படை சேவைகளுக்கான உரிமை, 7. கல்வி, நலவாழ்வுக்கான உரிமை ,8. மது-போதைப் பொருள்களால் பாதிக்கப்படாமல் இருக்கும் உரிமை , 9. நீடித்திருக்கும் நகர்ப்புற வளர்ச்சிக்கான உரிமை , 10. ஆரோக்கியமான சுற்றுச்சூழலுக்கான உரிமை ஆகிய 10 வகையான அடிப்படை உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்குடனும் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் நேற்று மாலை தொடங்கி தமிழ்நாடு நாளான நவம்பர் 1-ஆம் தேதி வரை தமிழக மக்கள் உரிமை மீட்புப் பயணம் என்ற தலைப்பில் நடைபயணம் மேற்கொள்ளவுள்ளார். செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூரில் தொடங்கும் இந்த பயணம் தருமபுரியில் நிறைவடையவுள்ளது.

அன்புமணி ராமதாஸ் மேற்கொள்ளும் இந்த பயணத்திற்காக ' உரிமைப் பயணம் ' என்ற தலைப்பில் பரப்புரை பாடல் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த பாடலை அன்புமணி ராமதாஸ் சற்று முன் அவரது சமூக ஊடகங்கள் வாயிலாகவும், பாட்டாளி மக்கள் கட்சியின் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் வெளியிட்டார்.

# ராஜஸ்தானில் பள்ளி மேற்கூறை இடிந்து 7 மாணவர்கள் உயிரிழப்பு: 32 பேர் காயம்

**ஜெய்ப்பூர், ஜூலை 26-**
ராஜஸ்தானின் ஜலாவர் மாவட்டத்தில் உள்ள அரசு இடைநிலைப் பள்ளி ஒன்றின் மேற்கூரை இடிந்து விழுந்ததில், 7 மாணவர்கள் உயிரிழந்தனர். 32 பேர் காயமடைந்தனர். ஜலாவர் மாவட்டம், தங்கிபுரா காவல் எல்லைக்கு உட்பட்ட பிப்லோட் கிராமத்தில் இயங்கி வரும் இடைநிலை அரசு பள்ளியில் 6 மற்றும் 7-ம் வகுப்பு மாணவர்கள் படித்து வருகின்றனர். நேற்று வழக்கம்போல் பள்ளி கூடி, காலையில் இறைவணக்கம் பாடிக் கொண்டிருக்கும் போது பள்ளி கட்டிடத்தின் மேற்கூரை இடிந்து விழுந்துள்ளது.



இதில், இடிபாடுகளில் மாணவர்கள் பலர் சிக்கி உள்ளனர். ஆசிரியர்கள் மற்றும் கிராம மக்கள் இணைந்து மேற்கொண்ட மீட்புப் பணி மூலம் பல மாணவர்கள் மீட்கப்பட்டுள்ளனர். எனினும் இந்த விபத்தில் 7 மாணவர்கள் உயிரியழந்துவிட்டதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய தங்கிபுரா காவல்நிலைய அதிகாரி விஜேந்திர சிங், "4 மாணவர்கள் உயிரிழந்துவிட்டனர். 32 பேர் காயமடைந்துள்ளனர். 2 பேர் மிக மோசமாக காயமடைந்துள்ளனர். காயமடைந்த மாணவர்கள் ஜலாவரில் உள்ள எஸ்ஆர்ஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காலை 7.45 மணி அளவில் இந்த விபத்து நேரிட்டுள்ளது. 6 மற்றும் 7ம் வகுப்பு மாணவர்களின் வகுப்பறைகளின் மேற்கூரை இடிந்து விழுந்துள்ளது." என தெரிவித்திருந்தார். இந்நிலையில், மோசமாக காயமடைந்த இரண்டு மாணவர்களும் உயிரிழந்த நிலையில், பலி 7 ஆக அதிகரித்துள்ளார்.

விபத்து குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ராஜஸ்தான் கல்வி அமைச்சர் மதன் திலாவர், "பிப்லோட் கிராமத்தில் எதிர்பாராத விதமாக இந்த விபத்து ஏற்பட்டுவிட்டது. காயமடைந்த மாணவர்களுக்கு உரிய மருத்துவ உதவிகள் கிடைப்பதை உறுதிப்படுத்துமாறு மாவட்ட ஆட்சியர் மற்றும் கல்வி அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன். விபத்துக்கான காரணத்தை கண்டறிவதற்கான முழுமையான உயர்மட்ட விசாரணை மேற்கொள்ளப்படும்" என தெரிவித்தார். முதல்வர் பஜன்லால் ஷர்மா வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "பள்ளி மேற்கூரை இடிந்து விழந்த சம்பவம் மிகவும் வலியை தரக்கூடிய சோகமான சம்பவம். காயமடைந்த சிறுவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கப்படுவதை உறுதிப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. உயிரிழந்த மாணவர்களின் ஆன்மா சாந்தி அடையவும் அவர்களின் குடும்பத்தினர் இந்த இழப்பை தாங்குவதற்கான வலிமையை பெறுவதற்கும் கடவுளை வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார். இந்த விபத்துக்கு குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் ஆழ்ந்த வேதனையைத் தெரிவித்துள்ளனர்.

# வைகோ தேர்தல் பிரச்சார அட்டவணை வெளியீடு

**சென்னை, ஜூலை 26-**
தமிழகத்தில் எட்டு இடங்களில் பிரச்சாரம் செய்ய இருக்கிறார் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ. அதற்கான பிரச்சார அட்டவணையும் வெளியிடப்பட்டுள்ளது.

2026 தேர்தல் நெருங்கி வரும் நிலையில், திமுக, அதிமுக மற்றும் பாமக உள்ளிட்ட கட்சிகள் தங்களது கட்சிப் பிரச்சாரத்தை தொடங்கி விட்டன. இந்நிலையில், மதிமுக சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கை: தமிழகத்தின் எட்டு இடங்களில் நம் மாநில வாழ்வாதாரங்களைக் காக்க, ஜனநாயகத்தைப் பாதுகாக்க மறுமலர்ச்சி திமுக பொதுச் செயலாளர் வைகோ பிரச்சாரக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கழகத்தினர், தமிழக உரிமைகளுக்காகப் போராடுகிறவர்கள், தமிழ்நாட்டின் மீது அடங்காப் பற்றுக் கொண்டவர்கள் பல்லாயிரக் கணக்கில் திரண்டிட கட்சி நிர்வாகிகள் தக்க ஏற்பாடுகளை செய்வார்கள்.

### வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு:
# 9 துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்

**ராமநாதபுரம், ஜூலை 26-**
வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளதால் 9 துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.

வடக்கு வங்கக் கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்று, மேற்கு - வடமேற்கு திசையில், மேற்கு வங்கம் - வடக்கு ஒடிசா கடலோரப் பகுதிகளை நோக்கி நேற்று நகரக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவானதை அடுத்து 9 துறைமுகங்களில் புயல் கூண்டு ஏற்றப்பட்டு உள்ளது. அதன்படி சென்னை, கடலூர், நாகை, எண்ணூர், காட்டுப்பள்ளி, பாம்பன், தூத்துக்குடி, காரைக்கால், புதுவை ஆகிய 9 துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் கூண்டு ஏற்றப்பட்டது. மேலும், ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# புதுச்சேரி: 3 சனிக்கிழமைகளில் பள்ளிகள் இயங்கும்

**புதுச்சேரி, ஜூலை 26-**
புதுச்சேரி பள்ளிகள் விடுமுறையை ஈடு செய்யும் வகையில் 3 சனிக்கிழமைகள் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரிக்க தொடங்கியதன் காரணமாக மாணவ-மாணவிகளின் நலன் கருதி பள்ளிகளுக்கு முன்கூட்டியே கோடை விடுமுறை வழங்க வேண்டும் என மக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து புதுச்சேரியில் கடந்த ஏப்ரல் 28-ம் தேதி (28-04-2025) முதல் ஜூன் 1-ம் தேதி வரை பள்ளிகளுக்கு கோடை விடுமுறை அளித்து அமைச்சர் நமச்சிவாயம் உத்தரவிட்டிருந்தார்.இந்நிலையில் புதுச்சேரியில் வெயிலின் தாக்கத்தால் முன்னதாகவே விடப்பட்ட கோடை விடுமுறை தினமான 3 நாட்கள் (ஏப்ரல் 28, 29, 30ம் தேதிகள்) விடுமுறையை ஈடு செய்யும் வகையில் வரும் ஆகஸ்ட் 2, 30ம் தேதி மற்றும் நவம்பர் 15ம் தேதி ஆகிய நாட்களில் (சனிக்கிழமை) பள்ளிகள் இயங்கும் என அறிவிப்பு வெளியாகி உள்ளது.

# வைகோ, கமல்ஹாசனுக்கு முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து



சென்னை, ஜூலை 26-
பதவிக்காலம் நிறைவு பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாராட்டியும், புதிதாகப் பொறுப்பேற்கவுள்ள எம்.பி.,க்களை வாழ்த்தியும் தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அறிக்கையில் முழு விவரம் வருமாறு:-

நாடாளுமன்ற வரலாற்றில் மதி.மு.க. பொதுச்செயலாளர் அண்ணன் வைகோ நான்கு முறை மாநிலங்களவை உறுப்பினராகவும், ஒரு முறை மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றித் தனக்கு கிடைத்த நீண்ட நெடிய அனுபவத்தின் வாயிலாக, தமிழர் நலனையும் தமிழ்நாட்டின் உரிமைகளையும் சங்கநாதமென முழங்கியவர். கருப்பு-சிவப்பு கழகத்தில் அண்ணன் சண்முகம் மாநிலங்களவைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, தனது பணியினைச் சிறப்பாக நிறைவேற்றி, பதவிப் பொறுப்பை நிறைவு செய்திருக்கிறார். அவருடைய தொழிற்சங்கப் பணிகள் தொய்வின்றித் தொடர்ந்திட வாழ்த்தி மகிழ்கிறேன்.

மூத்தோர் அவை என அழைக்கப்படும் நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழகத்தின் இளங்குருத்தாக அனுப்பி வைக்கப்பட்ட தம்பி எம்.எம்.அப்துல்லா, தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பை உணர்ந்து, மாநிலங்களவையில் மக்கள் சேவகராகச் சிறப்பாகப் பணியாற்றினார்.

அதேபோல், நீதிமன்றங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்புகளைப் பெற்றுத் தந்து ஒடுக்கப்பட்ட மக்களுடைய உரிமைகளைக் காத்து வரும் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் நாடாளுமன்ற மாநிலங்களவையில் மீண்டும் தன்னுடைய அழுத்தமான வாதங்களை வைத்து உரிமைக்குரல் எழுப்பவுள்ளார். அவருக்கும், மாநிலங்களவையில் புதிதாகப் பொறுப்பேற்று தங்களுடைய கருத்துகளைப் பதிவு செய்யவுள்ள அருமை நண்பர் கமல்ஹாசன், எஸ்.ஆர்.சிவலிங்கம், கவிஞர் சல்மா ஆகியோருக்கும் அவர்களது பணி சிறக்க என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


## பயனாளிகளுக்கு 6,007 பேருக்கு
# வீட்டுமனைப் பட்டாக்களை அமைச்சர்கள் வழங்கினர்

சென்னை, ஜூலை 26-
சென்னையில் நடைபெற்ற அரசு விழாவில் 6,007 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டாக்களை அமைச்சர்கள் வழங்கினர். தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:- அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், சு.முத்துசாமி, பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (25.07.2025) சென்னை, அம்பத்தூர் சர்.ராமசாமி முதலியார் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில் 6,007 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டாக்களை வழங்கினர்.

சென்னை மாவட்டம் மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் உள்ள நடைமுறை சிக்கல்களுக்கு தீர்வுகாண தமிழ்நாடு முதல்வரின் அறிவுரைக்கிணங்க, மாநில அளவிலான உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் சென்னை மாவட்டத்தில் இதுவரை 1,33,190 பயனாளிகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து நேற்று (25.07.2025) அம்பத்தூர் சட்டமன்ற தொகுதியில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய திட்டத்தின் கீழ் 2,445 பட்டாக்களும், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திட்டங்கள் கீழ் 62 பட்டாக்களும், நகர நிலவரித் திட்டத்தின் கீழ் 3,500 பட்டாக்களும் என 6,007 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2-வது நீண்ட கால பிரதமர்:
# இந்திராகாந்தியின் சாதனையை முறியடித்த பிரதமர் நரேந்திரமோடி



புதுடெல்லி, ஜூலை 26-
இந்திய வரலாற்றில் தொடர்ச்சியாக 2-வது நீண்ட கால பிரதமர் என்ற பெருமையை நரேந்திரமோடி பெற்றுள்ளார்.

2014-ம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தல் முதல் தற்போது வரை நடைபெற்ற 3 தேர்தல்களில் பா.ஜ.க. தொடர் வெற்றி பெற்று பிரதமராக நரேந்திரமோடி இருந்து வருகிறார். அந்த வகையில், அவர் நேற்று பிரதமராக 4,078 நாட்களை கடக்கிறார்.

அத்துடன் புதிய சாதனை ஒன்றையும் புரிந்துள்ளார். அதாவது, இந்தியாவின் நீண்ட நாள் பிரதமர் என்ற சாதனைதான் அது.

இதற்கு முன்பு இந்த சாதனைக்கு சொந்தக்காரராக இருந்தவர் மறைந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி. இவர் 1966-ம் ஆண்டு ஜனவரி 24-ந் தேதி முதல் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ந் தேதி வரை தொடர்ந்து 4,077 நாட்கள் பிரதமராக இருந்தார். அவருக்கு பிறகு நரேந்திரமோடி இந்திய வரலாற்றில் தொடர்ச்சியாக 2-வது நீண்ட கால பிரதமர் என்ற பெருமையை பெற்றுள்ளார். இதுமட்டுமல்லாது, மோடி ஏற்கனவே பல சாதனைகளை படைத்துள்ளார். அதாவது, சுதந்திரத்திற்கு பிறகு பிறந்த முதல் பிரதமர், காங்கிரஸ் கட்சியை சாராத பிரதமராக நீண்ட காலம் பதவி வகித்தவர். இந்தி பேசாத மாநிலத்தில் இருந்து அதிக காலம் பதவி வகித்தவர். குஜராத் முதல்வர், பிரதமர் என 2 முறை பதவிக்காலங்களை நிறைவு செய்து, 2 முறை பெரும்பான்மையுடன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று அவரது சாதனை பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. தொடர்ச்சியாக 3 மக்களவை தேர்தல்களில் தங்களது கட்சியை வெற்றிக்கு அழைத்து சென்றதில் மறைந்த முன்னாள் பிரதமர் நேருவின் சாதனையை பிரதமர் மோடி ஏற்கனவே முறியடித்து இருக்கிறார். அந்த வகையில், தற்போது இந்திரா காந்தியின் சாதனையை பிரதமர் மோடி நேற்று முறியடித்து உள்ளார்.

ஏற்கனவே, ஜவஹர்லால் நேரு தொடர்ந்து 16 ஆண்டுகள் பிரதமராக பதவி வகித்து முதல் இடத்தில் உள்ளார். இந்தச் சாதனையை பிரதமர் நரேந்திரமோடி முறியடிக்க வேண்டுமென்றால், 2029-ம் ஆண்டு நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலிலும் வெற்றி பெற்றாக வேண்டும்.

# இந்தியாவின் கருத்துக்கு உறுதியான பங்களிப்பாளராக வருகிறேன்: கமல்



புதுடில்லி, ஜூலை 26-
நான் வெறும் விமர்சகனாக மட்டும் பார்லிமெண்ட் வரவில்லை; மாறாக இந்தியாவின் கருத்துக்கு உறுதியான பங்களிப்பாளராக வருகிறேன் என ராஜ்யசபா எம்.பி., கமல் தெரிவித்துள்ளார். ராஜ்யசபா எம்.பி.,யாக கமல் நேற்று காலை பதவியேற்றுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: இந்த தருணம் என்னுடையது மட்டுமல்ல. அதிகார அறைகளுக்குள் நான் குரல் கொடுக்கும் என் மக்களுடன் இதைப் பகிர்ந்து கொள்கிறேன்.

நான் பார்லிமென்டிற்கு வெறும் விமர்சகராக வரவில்லை. மாறாக இந்தியாவின் கருத்துக்கு உறுதியான பங்களிப்பாளராக வருகிறேன். நான் எதிர்க்க வேண்டிய இடத்தில், பகுத்தறிவுடன் அதைச் செய்வேன். ஆதரிக்க வேண்டிய இடத்தில், நான் அதை உறுதியுடன் செய்வேன். ஆலோசனை வழங்க வேண்டிய இடத்தில், அதை ஆக்கப்பூர்வமாக செய்வேன். பெயரளவுக்கு இல்லாமல், ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்காகச் செய்வேன்.

டில்லியில் தமிழகத்தின் குரலாக இரக்கமுள்ளவராகவும், அர்ப்பணிப்புடனும் இருக்க நான் பாடுபடுவேன். நான் ஒரு சமூகத்திற்காக அல்ல, பொது நன்மைக்காகப் பேசுவேன். குறுகிய ஆதாயத்திற்காக அல்ல, தேசிய வளர்ச்சிக்காக. இந்தப் பயணத்தில் என்னுடன் நடந்த மக்களுக்கு நான் நன்றி கூறுகிறேன். சந்தேகிப்பவர்களுக்கு நான் உங்கள் பேச்சைக் கேட்கிறேன். என்னை நம்புபவர்களுக்கு ஒரு போதும் ஏமாற்ற மாட்டேன். அரசியலமைப்புச் சட்டத்தின் மீது பயபக்தியுடனும், ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையுடனும், என் மக்கள் மீது அன்புடனும், இந்த அத்தியாயத்தை ஒரு உச்சக்கட்டமாக அல்ல, ஒரு தொடக்கமாகத் தொடங்குகிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் கமல் கூறியுள்ளார்.

## ‘உருட்டுகளும் திருட்டுகளும்’ என்ற பெயரில்
# புதிய பிரசாரத்தை தொடங்கி வைத்த எடப்பாடி பழனிசாமி




புதுக்கோட்டை, ஜூலை 26-
‘உருட்டுகளும் திருட்டுகளும்’ என்ற பெயரில் புதிய பிரசார முன்னெடுப்பை எடப்பாடி பழனிசாமி தொடங்கி வைத்தார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி, “மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்” என்ற பெயரில் தமிழகம் முழுவதும் சட்டமன்ற தொகுதி வாரியாக சுற்றுப்பயணம் செய்து மக்களை நேரில் சந்தித்து வருகிறார்.

அதன்படி 15-வது நாளான நேற்று முன்தினம் புதுக்கோட்டை மாவட்டத்தில் கந்தர்வக்கோட்டை, ஆலங்குடி, அறந்தாங்கி சட்டமன்ற தொகுதிகளில் அவர் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இந்த நிலையில், ‘உருட்டுகளும் திருட்டுகளும்’ என்ற பெயரில் புதிய பிரசார முன்னெடுப்பை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று தொடங்கி வைத்தார். ‘மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்’ என்ற முன்னெடுப்பின் ஒரு பகுதியாக பிரசார திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:- “மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்” என்ற எழுச்சி பயணத்தை கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் தொடங்கி, புதுக்கோட்டை மாவட்டம் வரை சுமார் 46 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 15 லட்சம் மக்களை சந்தித்துள்ளேன். இந்த எழுச்சி பயணத்தின்போது மக்கள் எனக்கு அளித்த வரவேற்பு, ஆரவாரம், அவர்களின் முகத்தில் பார்த்த மகிழ்ச்சி 2026 சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. தலைமையில் அமைக்கப்பட்டுள்ள கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

பிரதமர் மோடியை சந்திக்கும் நேரம் இன்னும் உறுதியாகவில்லை. நாங்கள் உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தால் தவறா?. மக்களின் பிரச்சினைகள் தெரியாத அரசாங்கமாக தான் தி.மு.க. அரசாங்கம் உள்ளது. தி.மு.க. ஆட்சியில் நேர்மையான அதிகாரிகளுக்கு மரியாதை கிடையாது. கூட்டணிக்கு எதிராக பேட்டி கொடுப்பவர்கள் தான் கூட்டணியை உடைக்க முயல்கிறார்கள். தி.மு.க. செயல்படுத்தாத அறிவிப்புகள் குறித்து மக்களுக்கு துண்டு பிரசுரம் வழங்கப்படும். அ.தி.மு.க. கூட்டணிக்கு பெரிய கட்சிகள் எப்போது வரவேண்டுமோ அப்போது வரும். இவ்வாறு அவர் கூறினார்.

# பகுஜன் சமூகத்தின் வளர்ச்சிக்கு எதிராக பா.ஜ.க. சதி: ராகுல்காந்தி குற்றச்சாட்டு

புதுடெல்லி, ஜூலை 26-
மத்திய பல்கலைக்கழகங்களில் எஸ்.சி., எஸ்.டி. மற்றும் ஓ.பி.சி. பிரிவினருக்கான காலியாக உள்ள இடஒதுக்கீடு பதவிகள் குறித்து காங்கிரஸ் எம்பி ராகுல் காந்தி மத்திய அரசை தாக்கிப் பேசியுள்ளார்.

ராகுல் காந்தி எக்ஸ் தளபதிவில் கூறியதாவது:- பாராளுமன்றத்தில் மோடி அரசு முன்வைத்த புள்ளி விரவங்கள் பகுஜன்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதற்கும், நிறுவன ரீதியான மனுவாதம் இருப்பதற்கும் உறுதியான சான்றாகும். மத்திய பல்கலைக்கழகங்களில் எஸ்.டி.-களுக்கான பேராசிரியர் பதவிகளில் 83 சதவீதமும், ஓ.பி.சி.களுக்கான 80 சதவீதமும், எஸ்.சி.களுக்கான 64 சதவீதமும் வேண்டுமென்றே காலியாக வைக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், எஸ்.டி.-களுக்கான உதவிப் பேராசிரியர் பதவிகளில் 65 சதவீதமும், ஓ.பி.சி.-களுக்கான 69 சதவீதமும், எஸ்.சி.-களுக்கான 51 சதவீதமும் காலியாக விடப்பட்டுள்ளன.

இது வெறும் அலட்சியம் மட்டுமல்ல.. பகுஜன் சமூகத்தை ஆராய்ச்சி மற்றும் கொள்கைகளிலிருந்து விலக்கி வைப்பதற்கான திட்டமிடப்பட்ட சதியாகும். பல்கலைக்கழகங்களில் ‘பகுஜன்களின்’ போதுமான பங்கேற்பு இல்லாததால், தாழ்த்தப்பட்ட சமூகங்களின் பிரச்சினைகள் ஆராய்ச்சி மற்றும் விவாதங்களிலிருந்து வேண்டுமென்றே மறைந்துபோகும்படி செய்யப்படுகின்றது.

இவ்வாறு அதில் பதிவிட்டுள்ளார்.

## தாய்லாந்து - கம்போடியா மோதல்:
# இந்தியர்களுக்கு மத்திய அரசு எச்சரிக்கை

புதுடெல்லி, ஜூலை 26-
தாய்லாந்து - கம்போடியா இடையே ராணுவ மோதல் அதிகரித்து வரும் நிலையில், தாய்லாந்தின் 7 மாகாணங்களுக்குச் செல்வதை தவிர்க்குமாறு இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

தாய்லாந்து - கம்போடியா இடையே கடந்த 2 நாட்களாக இரு நாட்டு எல்லையில் ராணுவ மோதல் நிகழ்ந்து வருகிறது. இதனிடையே, இரு நாடுகளின் எல்லைகளில் வசிக்கும் மக்கள் தங்கள் பகுதிகளில் இருந்து வெளியேறி வருகிறார்கள். இரு நாட்டு ராணுவத்துக்கு இடையேயான மோதல் காரணமாக தாய்லாந்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில், 14 பேர் பொதுமக்கள் என்றும், ஒருவர் ராணுவ வீரர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 46 பேர் காயமடைந்துள்ளதாகவும், இவர்களில் 15 பேர் ராணுவ வீரர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் உள்ள கம்போடிய தூதரை நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்ட தாய்லாந்து அரசு, கம்போடியாவில் உள்ள தனது தூதரை திரும்ப அழைத்துக்கொண்டுள்ளது. எல்லையில் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், இரண்டு நாடுகளும் அமைதி காக்க அமெரிக்கா, பிரான்ஸ், சீனா உள்ளிட்ட நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. இதனிடையே, இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு மத்திய அரசு பயண எச்சரிக்கை வெளியிட்டுள்ளது. தாய்லாந்தில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள பயண எச்சரிக்கையில், “தாய்லாந்து - கம்போடியா எல்லைக்கு அருகிலுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தாய்லாந்திற்குச் செல்லும் அனைத்து இந்தியப் பயணிகளும் தாய்லாந்து சுற்றுலா துறை வெளியிடும் செய்திகளை அறிந்து முடிவுகளை எடுக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், தாய்லாந்தில் உள்ள உபோன் ரட்சதானி, சுரின், சிசாகெட், புரிராம், சா கேயோ, சாந்தபுரி மற்றும் டிராட் ஆகிய 7 மாகாணங்களுக்குச் செல்வதை தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய கல்வி கொள்கை குறித்து பார்லி.யில் மத்திய அரசு விளக்கம்

புதுடெல்லி, ஜூலை 26-
கல்வியின் மீதான மாநில உரிமைகளை பறிப்பதற்கு தேசிய கல்விக்கொள்கை உருவாக்கப்படவில்லை என்று பாராளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது

பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் புயல் வீசி வருகிறது. இதன் காரணமாக கடந்த 21-ந் தேதி தொடங்கிய பாராளுமன்ற தொடரில் இதுவரை குறிப்பிடத்தக்க அலுவல் எதுவும் நடைபெறவில்லை. இந்த பாராளுமன்ற முடக்கம் நேற்றும் 5-வது நாளாக நீடித்தது.

இதற்கிடையில், பாராளுமன்ற மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு, ‘மாநில கல்வி உரிமைகளை பறிப்பதற்காக தேசிய கல்வி கொள்கை உருவாக்கப்பட்டு உள்ளதா?’ என்று கேள்வி எழுப்பி இருந்தார். அதற்கு மத்திய கல்வித்துறை மந்திரி சுகந்தா மஜும்தார் அளித்துள்ள பதில் வருமாறு:-

கல்வி பொதுப்பட்டியலில் இருப்பதால் தரமான கல்வியை அளிப்பதில் முறையே மத்திய, மாநில அரசுகளுக்கு சரிவிகித பொறுப்பு உள்ளது.

புதுமையான சிந்தனைகளை ஊக்குவிக்க மொழியை ஒரு தடையாக வைத்திராமல் செயல்பட இது உதவும். கல்வியின் மீதான மாநில உரிமைகளை பறிப்பதற்கு தேசிய கல்விக் கொள்கை உருவாக்கப்படவில்லை. மத்திய, மாநில அளவிலான முறையான கண்காணிப்பும் ஒருங்கிணைந்த செயல்பாடும் மட்டுமே இன்றியமையாதது. இக்கொள்கையை பற்றி விழிப்புணர்வை அளிக்கவும், மேலும் புதுமையான அம்சங்களைப் பற்றி ஆலோசிக்கவும் பயிற்சி வகுப்புகள், கருத்துப்பகிர்வை உறுதி செய்யும் ஆலோசனைக் கூட்டங்கள் பல்வேறு கட்டங்களாக மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் மற்றும் அதுசார்ந்த கல்வி அமைப்புகளுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு அவர் பதிலளித்து உள்ளார்.

# பிரதமர் மோடியை சந்திக்க ஓ.பி.எஸ்.க்கு நேரம் ஒதுக்கீடு?

சென்னை, ஜூலை 26-
தமிழகம் வருகை தரும் பிரதமர் மோடியை சந்திக்க முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதமர் மோடி 2 நாள் சுற்றுப்பயணமாக தமிழகம் வருகிறார். மாலத்தீவில் இருந்து இன்று (சனிக்கிழமை) இரவு ராணுவ விமானத்தில் தூத்துக்குடிக்கு வருகிறார். மாலத்தீவில் இருந்து புறப்பட்டு இரவு 7.50 மணிக்கு தூத்துக்குடி விமான நிலையம் வருகிறார். அங்கு அவர் விரிவாக்கப்பட்ட தூத்துக்குடி விமான நிலையத்தை திறந்து வைக்கிறார்.

பின்னர் இரவு திருச்சி செல்கிறார். அங்கு இரவு தங்குகிறார். 27-ந் தேதி அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரம் கோவிலில் நடக்கும் ஆடித் திருவாதிரை விழாவில் பங்கேற்கிறார். அந்த நிகழ்ச்சியை முடித்து விட்டு பகல் 2.25 மணிக்கு பிரதமர் மோடி திருச்சியில் இருந்து டெல்லி புறப்பட்டு செல்கிறார்.

இதற்கிடையில், தமிழகம் வருகை தரும் பிரதமர் மோடியை சந்திக்க முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் அனுமதி கேட்டு நேற்று கடிதம் எழுதினார்.

இந்த நிலையில், உங்களை சந்தித்தால் ‘பாக்கியம்’ என ஓ.பன்னீர்செல்வம் கடிதம் எழுதிய நிலையில், நேற்று பிரதமர் மோடியை சந்திக்க ஓ.பன்னீர்செல்வத்துக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. வரவேற்பின்போது சந்திப்பாரா? அல்லது வழியனுப்பும் போது இந்த சந்திப்பு நடைபெறுமா என்பது குறித்த தகவல் இன்னும் வெளியாகவில்லை.

# போக்குவரத்து துறையில் 3,200 பணியிடங்களை நிரப்ப விரைவில் எழுத்துத்தேர்வு: அமைச்சர் சிவசங்கர் தகவல்

கடலூர், ஜூலை 26-
போக்குவரத்து துறையில் 3,200 பணியிடங்களை நிரப்ப விரைவில் எழுத்துத்தேர்வு நடைபெறும் என்று அமைச்சர் சிவசங்கர் கூறினார்.

கடலூரில் அமைச்சர் சிவசங்கர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- போக்குவரத்து துறையில் கடந்த காலங்களில் நடந்த பிரச்சினைகளுக்கு எல்லாம் தற்போதைய முதல்வர் தான் ஒவ்வொன்றாக தீர்வு கொடுத்து வருகிறார்.

புதிய பஸ்களை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு 4,800 புதிய பஸ்கள் வாங்கி மக்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

மேலும் போக்குவரத்து துறையில் 680 புதிய பணியாளர்கள் பணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுதவிர டிரைவர், கண்டக்டர்கள் என 3,200 பணியிடங்களை நிரப்ப விரைவில் எழுத்துத் தேர்வு நடக்க இருக்கிறது. தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு நேர்முக தேர்வு நடத்தப்பட்டு, பணியமர்த்தப்படுவார்கள். இதன் மூலம் போக்குவரத்து துறை சீரமைக்கப்பட்டு வருகிறது. கடந்த காலத்தில் பாக்கி இருந்த தொகையும் படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# வீடு வீடாக சென்று பொதுமக்கள் பிரச்சினைகளை கேட்க வேண்டும்
## த.வெ.க. நிர்வாகிகளுக்கு விஜய் உத்தரவு



சென்னை, ஜூலை 26-
நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள் வீடு வீடாக சென்று மக்கள் பிரச்சினைகளை கேட்க வேண்டும் என்று விஜய் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே இருக்கும் சூழ்நிலையில் தமிழக தேர்தல் களம் இப்போதே சூடுபிடிக்க தொடங்கி விட்டது. அரசியல் கட்சிகள் இடையே கூட்டணி பேச்சுவார்த்தை திரைக்கு பின்னும், முன்னும் தொடங்கி உள்ளன. இந்த சூழலில் த.வெ.க. 2-ம் மாநாடு மதுரையில் ஆகஸ்டு 25-ம் தேதி நடைபெறும் என்று அக்கட்சி தலைவர் விஜய் அறிவித்திருந்தார். முன்னதாக நடிகர் விஜய், கடந்த ஆண்டு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே வி.சாலை கிராமத்தில் தனது கட்சியின் முதல் மாநாட்டை நடத்தினார்.

இதனிடையே ‘மக்கள் விரும்பும் முதல்வர் வேட்பாளர் விஜய்’ என வீடு வீடாக சென்று த.வெ.க நிர்வாகிகள் மற்றும் பூத் கமிட்டி நிர்வாகிகள் பிரசாரத்தைத் துவங்கி உள்ளனர்.

இந்நிலையில் முறையாக பூத் கமிட்டி நிர்வாகிகளை நியமனம் செய்யாத நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க த.வெ.க தலைவர் விஜய் உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதன்படி கிளை நிர்வாகிகள் வீடு வீடாக சென்று மக்கள் பிரச்சினைகளை கேட்க வேண்டும் என்றும், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு த.வெ.க நிர்வாகிகள் நேரில் செல்ல வேண்டும் என்றும், 2 வாரங்களுக்கு ஒரு முறை நிர்வாகிகளின் நடவடிக்கைகளை தொகுத்து கட்சி தலைமைக்கு வழங்க வேண்டும் என்றும் பூத் கமிட்டி நிர்வாகிகள் நியமனத்தை விரைவில் முடித்தே ஆக வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தி.மு.க. கூட்டணியில் இருப்பதால் தான் பா.ஜக, அ.தி.மு.க.வை விமர்சிக்கிறோம் என்று சிலர் கருதுகின்றனர். கூட்டணியில் இருந்தாலும் இல்லா விட்டாலும், பா.ஜ.க.வின் கொள்கையை ஒருபோதும் நாங்கள் ஏற்க மாட்டோம். பா.ஜ.க.வை ஏற்கனவே விமர்சிக்கிறோம், தொடர்ந்து விமர்சிப்போம்.

-திருமாவளவன்



அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கட்சிகளை கூட்டணிக்கு அழைத்து யாரும் வரவில்லை என்பதால் ஒவ்வொரு நாளும் மாற்றி மாற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றார். பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. அணி சேர்ந்திருக்கும் வரையிலும் அவர்களுடன் யாரும் கூட்டணி வைக்க வருவதற்கு தயாராக இல்லை.

- சண்முகம்



சாதி கணக்கெடுப்பை முன்பே செய்ய முடியாமல் போனது என் தவறு. காங்கிரஸ் கட்சியுடையது அல்ல. இப்போது அதை நான் சரி செய்கிறேன். காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்துவோம். ஓ.பி.சி., பழங்குடியினர் மக்களின் தங்கள் உழைப்புகான பலனை பாஜக ஆட்சியில் இன்னும் பெறவில்லை.

- ராகுல் காந்தி



பிரதமர் மோடி தமிழகம் வந்து சென்ற பின்னர் தான் அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? என தெரியவரும். தேர்தல் கூட்டணியை பொறுத்தவரை இன்னும் 6 மாதங்கள் இருக்கிறது. 6 நொடியில கூட அரசியலில் மாற்றம் வரும். 2026 ஜனவரியில் தான் கூட்டணி நிலைப்பாடுகள் பற்றி தெரியும்.

- டி.டி.வி.தினகரன்

# ஈரோடு மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் ச.கந்தசாமி விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்று குறைகளைக் கேட்டறிந்தார்



ஈரோடு,ஜூலை.26-

ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் ச.கந்தசாமி, தலைமையில் நடைபெற்றது.இக்கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்தாவது,

ஈரோடு மாவட்டத்தின் இயல்பான ஆண்டு சராசரி மழையளவு 733.44 மிமீ ஆகும். நடப்பு ஆண்டில் 27.06.2025 முடிய 214.67 மி.மீ பெய்துள்ளது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தற்போது 98.32 அடியாகவும், 27.43 மி.கன அடிநீர் இருப்பும் உள்ளது. நடப்பாண்டில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் விநியோகம் செய்வதற்காக நெல் விதைகள்

260 மெட்ரிக் டன்;, சிறு தானியங்கள் 61.3 மெட்ரிக் டன்;, பயறுவகைகள் 32.1 மெட்ரிக் டன், எண்ணெய் வித்துக்கள் 138.4 மெட்ரிக் டன்; இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இரசாயன உரங்களான யூரியா 4002 மெட்ரிக் டன்;, டி.ஏ.பி 2284 மெட்ரிக் டன், பொட்டாஷ் 2874 மெட்ரிக் டன்; மற்றும்; காம்ப்ளக்ஸ் 6897 மெட்ரிக் டன் இருப்பில் உள்ளது. நடப்பு பருவத்திற்குதேவையானஇடுபொருட்கள் போதுமான அளவு இருப்பில் உள்ளன.

விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள வட்டார மற்றும் துணை வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் இவற்றைப் பெற்று பயன் பெறலாம். மேலும் விவசாயிகளுக்குத் தேவையான பூச்சிமருந்துகள் மற்றும் இரசாயன உரங்கள் ஆகியவை போதுமான அளவுக்கு தனியார் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பி.எம்.கிசான் திட்டத்தில் ஆதார்; விபரங்களை சரிபார்த்து உறுதிசெய்தால் (நமுலுஊ) மட்டுமே இத்திட்டத்தின் கீழ் தொடர்ந்து நிதியுதவி பெற முடியும் என மத்திய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பி.எம்.கிசான் நிதி உதவி பெற்று வரும் விவசாயிகள் தங்களது வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணை இணைக்க வேண்டியதும் அவசியமாகும். இது வரை ஆதார் எண்ணை சரிபார்த்து உறுதி செய்யாத விவசாயிகள் மற்றும் வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணை இணைக்காத விவசாயிகள்; உடனடியாக அந்தந்த பகுதியில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு பதிவு செய்து திட்டப் பயன்கள் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. உழவர்கள் பொது சேவை மையத்தை அணுகி விவசாயிகளுக்கான தனித்துவ அடையாள எண் பெற வேளாண்மைத்துறை மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத்துறை சார்பில் கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. விவசாயிகளிடமிருந்து 110 கோர்pக்கை மனுக்கள் பெறப்பட்டது. தொடர்ந்து கலெக்டர் வேளாண்மை - உழவர் நலத்துறையின் சார்பில் அரசு திட்டங்கள் வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த புத்தகத்தை விவசாய பெருமக்களுக்கு வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார்;, வேளாண்மை இணை இயக்குநர் மீ.தமிழ்செல்வி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) (பொ) செ.ஜெயமணி, தோட்டக்கலை துணை இயக்குநர் மா.குருசரஸ்வதி, கூட்டுறவு சங்கங்களின் துணைபதிவாளர், செயற்பொறியாளர், நீர்வளஆதாரத்துறை, ஈரோடு மற்றும் பவானிசாகர் அணை கோட்டம், வருவாய்துறை அலுவலர்கள், தமிழ்நாடு மின்சாரவாரிய அலுவலர்கள், தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டுவாரிய அலுவலர்கள் மற்றும் பிறதுறைகளை சார்ந்த அலுவலர்கள் உட்பட விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



**ஈரோடு மாவட்டம் கொல்லன் கோயில் பேரூராட்சியில் நேற்று நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் தலைவர் பூ.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது இதில் உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களைக்கான ஆணைகளை பயனளிகளுக்கு வழங்கினார் நிகழ்ச்சியில் சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் ரவிச்சந்திரன் பேரூராட்சிதுணைத் தலைவர் சு கிருஷ்ணகுமார் செயல் அலுவலர் சாஜன் மேத்யூ மற்றும் மன்ற உறுப்பினர்கள் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்**

# மொடக்குறிச்சி பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



ஈரோடு ஜூலை 26-

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி பேரூராட்சியில் நேற்று ஸ்டாலினுடன் நான் முகாம் நடைபெற்றது முகாமுக்கு பேரூராட்சித் தலைவர் ச .செல்வம் பாள் சரவணன் தலைமை தாங்கி உடனடி தீர்வு காணப்பட்ட ஆணைகளை பயனாளிகளுக்கு வழங்கினார்

நிகழ்ச்சியில் தாசில்தார் (பொ) முத்துலட்சுமிகிழக்கு ஒன்றிய செயலாளர் கதிர்வேல் மொடக்குறிச்சி பேரூர் கழகச் செயலாளர் பி வி சரவணன் துணைச் செயலாளர் தன வெங்கடேஷ் துணைத்தலைவர் எஸ் கார்த்திகேயன் கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மதன்குமார் மன்ற உறுப்பினர்கள் பிரதீபா முருகேசன் சித்ரா ஞானசேகரன், கண்ணுசாமி பரிமளா தேவி ஜெயலட்சுமி செல்வராஜ் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்

# ஈரோடு மாநகராட்சி 4-வது மண்டலத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



ஈரோடு ஜூலை 26-

ஈரோடு மாநகராட்சி மண்டலம் 4ல் உங்களுடன் ஸ்டாலின் குறிஞ்சி மஹாலில் நேற்று மண்டல தலைவர் குறிஞ்சிஎன்.தண்டபாணி தலைமையில் நடைபெற்றது

ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் பொது மக்களிடம் மனுக்களை பெற்று உடனடித் தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுத்து உடனுக்குடன் சான்றிதழ்களைவழங்கினர்இந்நிகழ்வில் ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணி துணை மேயர் செல்வராஜ் உதவியாளர் லதா ஈரோடு மாநகர திமுக செயலாளர் மு.சுப்பிரமணியம் திமுக பகுதி செயலாளர் பொ. இராமச்சந்திரன் விசி நடராஜன் ,மாமன்ற உறுப்பினர் ராமேஷ்குமார், காங்கிரஸ் மண்டலதலைவர் ஜாபர்சாதிக் மாநகராட்சி அதிகாரிகள் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

நீலகிரி மாவட்டத்தில்

# நெடுகுளா, கோடநாடு ஊராட்சி பகுதிகளில் ரூ.1.77 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் ஆய்வு



ஊட்டி.ஜூலை.26-

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம், நெடுகுளா, கோடநாடு ஊராட்சி பகுதிகளில் ரூ. 1.77 கோடி மதிப்பில்; நடைபெற்று வரும் மற்றும் நடைபெற்று முடிந்த பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு இன்று (24.07.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நீலகிரி மாவட்டத்தில், கலெக்டர் , கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம் நெடுகுளா ஊராட்சிக்குட்பட்ட ஈளாடா காந்திநகர் பகுதியில் ஊராட்சி பொது நிதியிலிருந்து ரூ.6 இலட்சம் மதிப்பில் சீரமைக்கப்பட்டு வரும் அங்கன்வாடி மைய கட்டடத்தினை பார்வையிட்டு மூன்று நாட்களுக்குள் பணிகளை முடித்து சுத்தம் செய்து அங்கன்வாடி அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும், கோடநாடு ஊராட்சிக்குட்பட்ட சுண்டட்டி கிராமத்தில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் வேளாண் கிடங்கினை பார்வையிட்டு 15 நாட்களுக்குள் முடித்து திறப்பதற்கு தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும், ரூ.3.50 இலட்சம் மதிப்பில் ரவி வீடு முதல் பொது விளையாட்டு மைதானம் வரை முடிக்கப்பட்ட கான்கிரீட்; சிமெண்ட் சாலை பணியினையும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.3 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் வேளாண் கிடங்கு தடுப்புச் சுவர் கட்டும் பணியினையும், கோடநாடு ஊராட்சிக்குட்பட்ட வெற்றிநகர் பகுதியில் ராஷ்டிரிய கிராம சுராஜ் அபியான் திட்டத்தின் கீழ் ரூ.5 இலட்சம் மதிப்பில் நடைபெற்று முடிந்த ஊராட்சி ஒன்றிய பொது சேவை மைய கட்டடத்தினையும், வெற்றிநகர் சங்கர் வீடு முதல் சீனிவாசன் வீடு வரை அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.3 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட கான்கிரீட் நடைபாதை மற்றும் தடுப்புச்சுவரினையும், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் முத்தம்மாள் ஆறுமுகம் என்ற பயனாளிக்கு ரூ.3.50 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் வீடு கட்டும் பணியினை பார்வையிட்ட ஒன்னரை மாத காலத்திற்குள் முடித்து அவர்களிடையே ஒப்படைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், கலெக்டர் , கோடநாடு ஊராட்சிக்குட்பட்ட பொன்னூர் பழங்குடியினர் கிராமத்தில் உள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

அப்போது அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் நடைபாதை மற்றும் ஒரு கால்வாய் அமைத்து தர கோரிக்கையினை முன் வைத்தனர். உடனடியாக கலெக்டர் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ஒரு கால்வாய் மற்றும்; நடைபாதை பொது நிதியிலிருந்து அமைத்து தர அறிவுறுத்தினார்.

மேலும், கலெக்டர் அங்கன்வாடி மையம் மற்றும் இப்பகுதிகளில் உள்ள வீடுகளின் விவரங்கள் குறித்து பொது மக்களிடையே கேட்டறிந்தார்.

பின்னர், கலெக்டர் , கஸ்தூரிபா நகர் பகுதியில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் செல்வமணி மற்றும் முருகேசன் என்ற பயனாளிகளுக்கு தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் வீட்டின் கட்டுமான பணிகளையும், மகாத்;மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.3 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் நிலம் சுத்தம் செய்யும் பணியினை, காக்காசோலை பகுதியில் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் பயணியர் நிழற்குடை கட்டுமான பணியினையும், கேர்கொம்பை பகுதியில் மகாத்;மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.29 இலட்சம் மதிப்பில் நடைபெற்று முடிந்த கான்கிரீட் சிமெண்ட் சாலை பணியினையும், வ.உ.சி நகர் மற்றும் ஆடதொரை பகுதிகளில் 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் தலா ரூ.49.67 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வட்டார சுகாதார மையத்தின் கட்டுமான பணிகளையும்;, என மொத்தம் ரூ.1.77 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் மற்றும் நடைபெற்று முடிந்த பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை நேரில்; பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அறிவுறுத்தினார். அதனை தொடர்ந்து, ஈளாடா அரசு உயர்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவியர்களின் கற்றல் திறன் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவு பொருட்களின் இருப்பு மற்றும் குடிநீர் வசதி ஆகியவற்றை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். முன்னதாக, கலெக்டர் நெடுகுளா ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பல்வேறு பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இவ்ஆய்வின் போது, கோத்தகிரி வட்டார வளர்ச்சி அலுவலர் அனிதா, உதவி பொறியாளர் ஜெயந்தி உட்பட பலர் உடனிருந்தனர்.

# நந்தா பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் வளாகத்தேர்வு



ஈரோடு ஜூலை 26-

ஈரோடு நந்தா பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில் இறுதியாண்டு பயின்று வெளியேறும் மாணவர்களுக்கென, அமெரிக்காவின் மெக்ஸிக்கோ மாகாணத்தினை தலைமையிடமாகக் கொண்டு வணிகத்திற்கான தீர்வுகளை சிறப்பாக அளித்துவரும் ''அக்ரிகேட் இன்டெலிஜன்ஸ்'' நிறுவனமானது தனது சிறப்பு வளாகத்தேர்வினை அண்மையில் ச நடத்தியது.

ஸ்ரீ நந்தா அறக்கட்டளை தலைவர் . வி.சண்முகன் தலைமையில் நடைப்பெற்ற இவ்வளாகத் தேர்வினை ''அக்ரிகேட் இன்டெலிஜன்ஸ்'' நிறுவனத்தின் மனிதவள மேலாளர் .ஃபெர்ணான்டோ மற்றும் குழுவினர்கள் சிறப்பு விருந்தினரர்களாகக் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை துவக்கி வைத்தார்கள்.

மேலும், நந்தா பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் யு.எஸ். ரகுபதி, மற்றும் தொழில்நுட்ப கல்லூரியின் முதல்வர் முனைவர் ச. நந்தகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

பின்னர் 'அக்ரிகேட் இன்டெலிஜன்ஸ்'' நிறுவனத்தின் மனிதவள மேலாளர் ஃபெர்னான்டோ, இன்றைய செயற்கை நுண்ணறிவு காலத்தில் வேகமாக செயல்பாட்டில் இருக்கும் தரவுகளை ஒருங்கிணைத்து வருவதாக கூறினார்.

இதற்கு தேவையான சிறந்த வணிக முடிவுகளை முன்கணிப்பு நுண்ணறிவாக மாற்றி, அதனை வணிக நிறுவனங்களுக்கு அளித்து வருவதாகவும் இத்தகைய பணிகளுக்கு தங்களைப் போன்ற பொறியாளர்களை இது போன்ற வளாகத்தேர்வுகளின் மூலம் தேர்ந்தெடுத்து, சிறப்பான பயிற்சிக்குப்பின் நிலையான பணியினை அளித்து வருகிறோம் என்று கூறினார்.

இவ்வளாகத்தேர்வில் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளிலிருந்து சுமார் 430க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் கல்லூரியின் ஆய்வங்களிலுள்ள கணினிகளின் மூலம் இணைதள வாயிலாக முதல் நிலைத்தேர்வினை எதிர்க்கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வளாகத் தேர்வினை ஏற்பாடு செய்திருந்த கல்லூரியின் வேலைவாய்ப்பு அலுவலக ஆசிரியர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை செயலர் எஸ்.நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ்.திருமூர்த்தி, முதன்மை கல்வி அதிகாரி . எஸ். ஆறுமுகம் மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் பாராட்டினார்கள்



கள்ளுக்கடை மேடு அருள்மிகு ஸ்ரீ கொண்டத்து பத்ரகாளியம்மன் திருக்கோவில் ஆடி மாத இரண்டாம் வெள்ளிக்கிழமை அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்த போது எடுத்த படம்

# ஊட்டியில் தொடர்ந்து பெய்து வரும் மழை: சுற்றுலா தளங்கள் வெறிச்சோடின

ஊட்டி, ஜூலை.26-

ஊட்டி சுற்று வட்டார பகுதிகளில் பரவலாக மழை தொடர்வதால் படகு இல்லம் வெறிச்சோடியது. முன்னெச்சரிக்கை காரணமாக தொட்டபெட்டா காட்சி முனை மூடப்பட்டது.

நீலகிரியில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை தென்மேற்கு பருவ மழை கொட்டி தீர்க்கும். இந்தாண்டு முன்கூட்டியே பருவமழை தொடங்கி தீவிரமாக பெய்து வருகிறது.

இந்த நிலையில் கடந்த ஒரு வார காலமாக நீலகிரி மாவட்டத்தில் கன மழை பெய்யும் என தொடர்ந்து வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்து வரும் நிலையில் கடந்த சில நாட்களாக மழை பொழிவு குறைவாக காணப்பட்டு வந்தது. ஆனால் நேற்று காலை முதல் மழையின் தாக்கம் அதிகமாக காணப்பட்டு வருகிறது.

குறிப்பாக பலத்த காற்றுடன் மழை பெய்து வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது.

ஊட்டி மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் சூறைக்காற்றுடன் தொடர்ந்து பெய்து வரும் பரவலான மழையின் காரணமாக கடும் குளிர் நிலவுகிறது. இதனால் பள்ளி கல்லூரி செல்லும் மாணவர்கள் அவதிப்படுகின்றனர். கேரட் அறுவடைக்கு செல்லும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர் மழையால் சுற்றுலா பயணிகளின் வருகை குறைந்துள்ளது. இதன் காரணமாக ஊட்டி ஏரியில் அவ்வப்போது படகு சவாரி நிறுத்தப்பட்டது. படகு இல்லம் சுற்றுலா பயணிகள் இல்லாமல் வெறிச்சோடியது. மிதி படகு சவாரி சேவை நிறுத்தப்பட்டு, இயந்திர படகு சேவை மட்டும் நடத்தப்பட்டது. இந்த நிலையில் பலத்த காற்று காரணமாக தொட்டபெட்டா காட்சி முனை மூடப்பட்டு உள்ளது .

அப்பகுதியில் மரங்கள் அதிகமாக உள்ளதால் காற்றின் வேகம் காரணமாக மரங்கள் சாய்ந்து அசம்பாவிதங்கள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் தொட்டபெட்டா சுற்றுலா தளம் மூடப்பட்டுள்ளது.

இதேபோல் 8-வது மைல் சுற்றுலா தளமும் மூடப்பட்டுள்ளது. பைன் மரக்காடு 3 நாட்களுக்கு பிறகு நேற்று திறக்கப்பட்டு உள்ளது.

இதேபோல கடந்த 1 மாதத்திற்கும் மேலாக மூடப்பட்டிருந்த சூட்டிங்மட்டம் சுற்றுலா தளம் நேற்று காலை முதல் திறக்கப்பட்டுள்ள நிலையில் மழை சூறைக்காற்றுடன் பெய்து வருவதால் சுற்றுலா பயணிகளின் வருகை வெகுவாக குறைந்து காணப்படுகிறது.

அங்கு வரும் ஒரு சில சுற்றுலா பயணிகளும் அச்சத்துடன் திரும்பி செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்



சென்னை திருவிக நகர் மண்டலம் 69வது வார்டில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்டமுகாமை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் மேயர் ஆர்.பிரியா, மண்டல குழு தலைவர் சரிதா கலந்து கொண்டனர்.

# நீலகிரியில் சட்ட விரோதமாக செயல்படும் தங்கும் விடுதிகள் குறித்து ஆய்வு செய்ய சிறப்பு குழு அமைப்பு

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அறிவிப்பு

ஊட்டி, ஜூலை.26-

நீலகிரி மாவட்டத்தில் சட்டவிரோதமாக செயல்பட்டு வரும் தங்கும் விடுதிகள் குறித்து கண்டறிந்து நடவடிக்கை எடுக்க சிறப்பு குழு அமைத்து ஆய்வு செய்யப்படுகிறது.

சர்வதேச சுற்றுலாத்தலமான நீலகிரிக்கு தமிழக மட்டுமல்லாமல் வெளி மாநிலங்கள் வெளிநாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகின்றனர். குறிப்பாக சீசன் மற்றும் தொடர் விடுமுறை காலங்களில் தினசரி சுற்றுலா பயணிகள் 20,000 அதிகமாக வருவதால் தங்கும் விடுதியில் இடம் கிடைக்காதது போக்குவரத்து நெரிசல் ஏற்படுதல் உள்பட பல்வேறு பிரச்சனைகள் உருவாகின்றன.

மேலும் கட்டுக்கடங்காமல் வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு சட்டவிரோதமாக அனுமதி இல்லாமல் கட்டப்பட்ட கட்டிடங்கள் தங்கும் விடுதிகளாக செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையில் நீலகிரி மாவட்டத்தில் சட்ட விரோதமாக செயல்பட்டு வரும் தனியார் தங்கும் விடுதிகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து நீலகிரி மாவட்டத்தில் சட்ட விரோதமாக செயல்பட்டு வரும் தனியார் தங்கும் விடுதிகளை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க மாவட்ட வருவாய் அலுவலர், நகராட்சி ஆணையர், மாவட்ட சுற்றுலா அலுவலர் மற்றும் உள்ளாட்சி அலுவலர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டு ஆய்வு பணிகள் நடைபெற்று வருகிறது.

எனவே பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் சட்டவிரோதமாக செயல்பட்டு வரும் தங்கும் விடுதிகள் குறித்து கலெக்டர் அலுவலகத்தில் உள்ள உதவி மைய எண் (9442772709 ) என்ற எண்ணை தொடர்பு கொண்டு தகவல் அளிக்கும் என்றும் அல்லது இதே எண்ணிற்கு வாட்சப் மூலமாக புகார் தெரிவிக்கலாம் எனவும் மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அறிவித்துள்ளார்.

# ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் மகளிர் மேம்பாட்டு அமைப்பு தொடக்க விழா



ஈரோடு ஜூலை 26-

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் மகளிர் மேம்பாட்டு அமைப்பின் தொடக்க விழா நேற்று கல்லூரியின் தாளாளர் பி.டி. தங்கவேல் வழிகாட்டுதலின் கீழ் நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் முனைவர் எச் வாசுதேவன் வாழ்த்துரை வழங்கினார்.மகளிர் மேம்பாட்டு அமைப்பின் தலைவர் முனைவர் எம்.சர்மிளா தேவி வரவேற்றார் . இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக புதுக்கோட்டையைச் சார்ந்த கவிஞர் M எம். சுடர்விழி கலந்துகொண்டு மாணவிகளுக்கு கல்வியின் அவசியத்தையும், புத்தக வாசிப்பு தன்னம்பிக்கையை தரும் என்பதையும் இக்கால சூழலில் எந்த நேரமும் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும் என்பதை எடுத்து கூறினார்..

மேலும் கோபி எம் எஸ் குழந்தைகள் மருத்துவமனையில் பணிபுரியும் உளவியல் மருத்துவர் டி . கவிதா கலந்து கொண்டு ஊடகங்களை எவ்வாறு கையாள வேண்டும் என்பதையும், பெண்களின் பன்முகத்திறன் குறித்தும், எதிர்மறை எண்ணங்களை தவிர்க்கும் முறை குறித்தும் பேசினார் .மேலும் 2025 -2026 ஆம் கல்வி ஆண்டிற்கான மகளிர் மேம்பாட்டு அமைப்பின் மாணவ உறுப்பினர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கான பொறுப்புகளும் வழங்கப்பட்டது. விழாவின் நிறைவாக மகளிர் மேம்பாட்டு அமைப்பின் செயலாளர் முனைவர் கே பிரபா நன்றி கூறினார்

விழாவிற்கான ஏற்பாடுகளை மகளிர் மேம்பாட்டு அமைப்பின் உறுப்பினர்கள் செய்திருந்தனர். இந்நிகழ்வில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர்

<u>கோபி அருகே</u>

# செவிலியர் பயிற்சி கல்லூரியில் உலக மக்கள் தொகை தினம், காசநோய், புகையிலை எதிர்ப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்



ஈரோடு ஜூலை 26-

ஈரோடு மாவட்டம் சிறுவலூர் வட்டாரம் அயலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய பகுதிக்குட்பட்ட கோபி அருகே கொளப்பலூரில் உள்ள ஸ்ரீ சாய் சிந்து நர்சிங் கல்லூரியில் பயிலும் மாணவியர்களுக்கு உலக மக்கள் தொகை தினம், காசநோய் ஒழிப்பு, புகையிலை எதிர்ப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் உலக மக்கள் தொகை தினம் கொண்டாடப்படுவதின் நோக்கம் பாலின சம விகிதம், பெண்களின் திருமணத்திற்கான வயது, குடும்ப நல கருத்தடை முறைகள், இளம் வயது திருமணத்தால் ஏற்படும் பெண்களின் சமூக பின்னடைவுகள், காசநோய் பரவும் விதம், நுரையீரல் காசநோயின் அறிகுறிகள் அதன் பாதிப்புகள், காச நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியவர்கள், நடமாடும் எக்ஸ்ரே ஊர்தியின் பயன்கள், காசநோய் இல்லா ஈரோடு இயக்கத்தின் நோக்கம். புகையிலை பழக்கத்தினால் ஏற்படும் தீங்குகள் உடல் நல பாதிப்புகள். புற்றுநோய் பாதிப்புகள். இளைய சமுதாயத்தினரின் சீரழிவுகள். புகையிலை பழக்க மீட்பு ஆலோசனை குறித்து விளக்கமாக சுகாதார நலக்கல்வி வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஈரோடு மாவட்ட துணை இயக்குனர் காசநோய் மருத்துவப் பணிகள் அலுவலக மாவட்ட நலக்கல்வியாளர் சிவகுமார், மாவட்ட சுகாதார அலுவலக மாவட்ட புகையிலை தடுப்பு பிரிவு சமூக சேவகர் சங்கீதா, வட்டார சுகாதார புள்ளியலாளர் (குடும்ப நலம்) பிரியா,செவிலியர் கல்லூரி முதல்வர் முனைவர் விமலா, சுகாதார ஆய்வாளர்கள் பாலமுருகன், சூர்யா, காசநோய் சிகிச்சை பார்வையாளர் விவேக் அமர்நாத், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவியர்கள் கலந்து கொண்டனர்.இறுதியாக உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டு, உலக மக்கள் தொகை தினம், காசநோய், புகையிலை விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டு, அனைவராலும் உலக மக்கள் தொகை தினம், காசநோய் ஒழிப்பு, புகையிலை எதிர்ப்பு உறுதி மொழிகள் எடுத்துக் கொள்ளப்பட்டது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po
Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# இந்தியாவிலேயே மருத்துவமனையில் இருந்தபடியே மக்கள் பணியாற்றும் ஒரே முதல்வர் ஸ்டாலின் தான்: துறைமுகத்தில் துணைமுதல்வர் உதயநிதி பெருமிதம்

சென்னை, ஜூலை – 26

இந்தியாவிலேயே மருத்துவமனையில் இருந்து மக்கள் சேவையாற்றுகின்ற ஒரே முதலமைச்சர் ஸ்டாலின் தான் என்று துணை முதலமைச்சர் உதயநிதி பெருமித்த்துடன் தெரிவித்தார்

சென்னை கிழக்கு மாவட்ட திமுக உட்பட்ட துறைமுகம், எழும்பூர்சட்டமன்றத் தொகுதிகளின் டிஜிட்டல் ஏஜென்ட்ஸ்மற்றும் பாக அளவிலான இளைஞர் அணியினருக்கான ஆலோசனைக்கூட்டத்தில் துணைமுதலமைச்சரும் திமுக இளைஞர் அணிச்செயலாளருமானஉதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு பேசியதாவது ,\

இரண்டு நாட்களாக பல்வேறு நிகழ்ச்சிகளில்கலந்து கொண்டுள்ளேன். நேற்று திருவள்ளூர் மாவட்டத்தில் பூந்தமல்லியில் ஒருநிகழ்ச்சி. இன்றைக்கு இந்த நிகழ்ச்சி. வருகின்ற வழியெல்லாம் தாய்மார்கள்என் கையை பிடித்துக்கொண்டு அப்பா எப்படி இருக்காங்க, எங்க அண்ணன்,தலைவர் எப்படி இருங்காங்க என்று ஒரு குடும்ப உறுப்பினர், இன்னொருகுடும்ப உறுப்பினரைக் கேட்பார்கள் அல்லவா, அந்த உணர்வை எனக்குஏற்படுத்தினார்கள்.



இந்த நிகழ்ச்சியின் மூலம் உங்களுக்கெல்லாம் சொல்லிக்கொள்வது, நம் தலைவர் மிகமிக நலமாக உள்ளார். மருத்துவர்கள்கொடுக்கின்ற மருத்துவத்தால் மட்டுமல்ல, இங்கு வந்திருக்கும் உங்களின்பேரன்பினால் நம் தலைவர் இன்னும் 2 நாட்களில் வீடு திரும்புவார்என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.மருத்துவமனையில் இருந்தே பணி இன்னொன்று சொல்லட்டுமா? இன்று இந்த நிகழ்ச்சியில் தலைவர் ஸ்டாலின் இல்லை என்றாலும், இந்த நிகழ்ச்சியை தொலைகாட்சியில்பார்த்துக்கொண்டிருந்தாலும், பார்த்துக் கொண்டு இருப்பார். நேற்றுமுன்தினமே அவரின் அலுவல் வேலைகளை எல்லாம் ஆரம்பித்து விட்டார்.நீங்கள் பார்த்திருப்பீர்கள். மருத்துவமனையில் இருந்தால்கூட அரசு தலைமைச்செயலாளர்களை எல்லாம் வரச்சொல்லி, `உங்களுடன் ஸ்டாலின்' பணிகள்எல்லாம் எப்படி சென்றுக்கொண்டு இருக்கிறது என்று கேட்டு,மருத்துவமனையில் இருந்தே பணி செய்கின்ற முதலமைச்சர், ஸ்டாலின் மட்டும் தான் ஒரு சின்ன கதையைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பூட்டப்பட்டபூட்டு, ஒரு சாவி, ஒரு சுத்தியல். பூட்டப்பட்ட இந்தப் பூட்டைத் திறப்பதற்காகசுத்தியல் எவ்வளவோ முயற்சி செய்தது. அந்தப் பூட்டின் தலையில் ஓங்கி, ஓங்கிஅடித்தது. ஆனால், அந்தப் பூட்டு திறக்கவே இல்லை. ஆனால், அந்த சாவிமிகவும் சுலபமாக உள்ளே சென்று பூட்டைத் திறந்துவிட்டது. அப்போது, அந்தசுத்தியல், சாவியைப் பார்த்து கேட்டது, நான் உன்னை விட இவ்வளவுபெரிதாக இருக்கிறேன். உன்னைவிட பலசாலியாக இருக்கிறேன். நான்எவ்வளவோ முயற்சி செய்தும் அந்தப் பூட்டை திறக்கவே முடியவில்லை. நீமட்டும் எப்படி இவ்வளவு சுலபமாக அந்த பூட்டைத் திறந்தாய் என்று சுத்தியல்,சாவியைப் பார்த்து கேட்டது.அப்போது அந்த சாவி சொல்லியது. நீ, பூட்டின் தலையில் ஓங்கிஅடிக்கிறாய், அதனால் உன்னை பூட்டுக்கு பிடிக்கவே, பிடிக்காது. ஆனால்,\நான் பூட்டின் இதயத்தைச் சென்று தொடுகிறேன். அதனால்தான், என்னால்மிகவும் சுலபமாக பூட்டைத் திறக்க முடிந்தது என்று சாவி, சுத்தியலிடம்சொன்னது.இங்கு நான் பூட்டு என்றுச் சொன்னது நம் தமிழ்நாடு, . சுத்தியல் என்றுசொன்னது ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசு. சாவி என்பது முதலமைச்சர் அவர்கள். எனவே, பா.ஜ.க என்கிற சுத்தியல், இந்தித் திணிப்பு,

தொகுதி மறுவரையறை, மொழி உரிமை பறிப்பு, நிதி உரிமை மறுப்பு என்றுஎவ்வளவுதான் ஓங்கி, ஓங்கி தலையில் அடித்தாலும், அதனால் தமிழ்நாட்டின்இதயத்தை தொட்டுக்கூட பார்க்க முடியாது. காரணம், தமிழ்நாட்டின்இதயத்தை தொடுகின்ற கழகம் என்னும் சாவியை பேரறிஞர் அண்ணாவும்,கலைஞர், நம் தலைவர் அவர்களின் கரங்களில்ஒப்படைத்து சென்றுள்ளார்கள். ஆகவே, இங்கு சங்கிகளும், அடிமைகளும் ஒருநாளும் வெல்ல முடியாது.தலைவர் நமக்கு ஒரு இலக்கு கொடுத்து இருக்கிறார்.வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு. 200 தொகுதிகளில்வெற்றிப்பெற்று காட்ட வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். 200 இல்லை200-க்கு மேலான தொகுதிகளில் நாம் வெற்றிப்பெற்று காட்ட வேண்டும்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபுஎம்.பிக்கள் தயாநிதிமாறன், என். ஆர்.இளங்கோவன், மேயர் பிரியா ராஜன், எம்எல்ஏக்கள் தாயகம் கவி, வழக்கறிஞர் பரந்தாமன், வெற்றியழகன் அணிகளின் மாநில நிர்வாகிகள் கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா,ஷேக் அப்துல்லா, உமாகாந்த், பரிதி இளம்சுருதி, வழக்கறிஞர் சந்துரு, தொகுதிப் பார்வையாளர்கள் நரேந்திரன், மருத்துவர் யாழினி,தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏகப்பன், புனி த வ தி எ த் தி ரா ச ன், தேவன், ஆசாத், பகுதிக் கழகச் செயலாளர்கள் முரளி, ராஜசேகர்,சுதாகர், வேலு, ஐ.சி.எஃப்.முரளி, நாகராஜன், வாசு, கு.பி.ஜெயின்,டி.எஸ். பி.ராஜகோபால், நாகராஜ், தமிழ்வேந்தன், சாமிக்கண்ணு, உள்பட திமுக முன்னணியினர் பங்கேற்றனர் .



அமைச்சர் சு முத்துசாமியிடம் ஈரோடு 43 வதுமாமன்ற உறுப்பினர் சபுரமா ஜாபர் சாதிக் மற்றும் காங்கிரஸ் மண்டல தலைவர்ஜாபர்சாதிக்ஆகியோர்கோரிக்கைமனுவழங்கினார். அதில் கூறப்பட்டுள்ளதாவது. மரப்பாலம் நேதாஜி வீதியில் செயல்பட்ட ஆயுர்வேத மருத்துவமனையில் மருத்துவர் இல்லாதகாரணத்தினால்தற்காலிகமாகசெயல்படுவதில்லை என்றும், மருத்துவரை நியமிக்க வேண்டுமென மாமன்ற கூட்டங்களிலும், மாநகராட்சி நிர்வாகத்திடமும் நிரவ வலியுறுத்தியதாகவும், மருத்துவர் இல்லாத காரணத்தினால் பொதுமக்கள்மிகவும்சிரமப்படுவதால்மருத்துவரைவிரைவில் நியமித்து மீண்டும் ஆயுர்வேத மருத்துவமனை செயல்பட வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது

# கொடுமுடி குறுமைய அளவிலான மாணவிகளுக்கான இறகு பந்து போட்டிகள்



ஈரோடு,ஜூலை.26-

கொடுமுடி குறுமைய அளவிலான மாணவிகளுக்கான இறகு பந்து போட்டிகள் தாமரை மெட்ரிக் பள்ளி உள் விளையாட்டரங்கில் நடைபெற்றது இதில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் இறகு பந்து போட்டியில் 17 வயதுக்குட்பட்ட மாணவிகளுக்கான போட்டியில் ஆர். பவந்திகா 10 வகுப்பு மாணவி வி.ஜி அக்ஷ விகா 9 ஒன்பதாம் வகுப்பு மாணவி வெற்றி பெற்றனர்.

19 வயது மாணவிகள் பிரிவில் டி. ஹரிணி11 வகுப்பு மாணவி மற்றும் எம்.டி.. வாமிகா 10 வகுப்பு மாணவி வெற்றி பெற்று அடுத்த மாதம் நடைபெறக்கூடிய மாவட்டங்களுக்கு இடையிலான இறகு பந்து போட்டிக்கு தகுதி பெற்றனர் இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளையும் உடற்கல்வி ஆசிரியர்களையும் பள்ளியின் தாளாளர் மற்றும் முதல்வர் பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தனர்.

# நீலகிரி மாவட்ட ஒருங்கிணைந்த சேவை மையத்திற்கு பணியாளர்கள் தேர்வு: விண்ணப்பிக்க வரும் 31ம் தேதி கடைசி நாள்

நீலகிரி ஜூலை.26-

நீலகிரி மாவட்டம்; சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் ஒருங்கிணைந்த சேவை மைய (கீழ்க்கண்ட பணியிடத்திற்கு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்ய உள்ளதால், பின்வரும் தகுதிகளுடன் உள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. முதுநிலை ஆலோசகர் ஒரு காலிபணியிடத்திற்கான பதவிக்கு சமூகபணி, ஆலோசனை உளவியல் அல்லது மனிதவள மேலாண்மையில் முதுகலைபட்டம் பெற்றிருக்க வேண்டும். 2 ஆண்டுகள் தொண்டு நிறுவனங்கள், அரசு சார்ந்த திட்டங்களில் பணி புரிந்தவராகவும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஒருவருடம் ஆலோசனை வழங்குவதில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். பெண்கள் மட்டும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கவும். பணிபுரிவோர் ஒருங்கிணைந்த சேவை மையத்தில் 247 இருத்தல் வேண்டும், உள்ளூரில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் ரூ.22இ000-பல்நோக்கு பணியாளர் (ஆரடவiPரசிழளந றுழசமநச) ஒரு காலிபணியிடத்திற்கான பதவிக்கு அலுவலகத்தில் பணிபுரிந்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் சமையல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். பெண்கள் மட்டும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கவும், உள்ளூரில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் ரூ.10இ000-காவலர் ஒரு காலிபணியிடத்திற்கான பதவிக்கு அலுவலகத்தில் பணிபுரிந்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். பெண்கள் மட்டும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கவும், உள்ளூரில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் ரூ.12000- எனவே,ஒருங்கிணைந்த சேவை மையம்ற்கு மேற்கண்ட பணியிடத்திற்கு விண்ணப்பங்களை ,மாவட்ட சமூகநல அலுவலர்,மாவட்ட சமூகநல அலுவலகம், கலெக்டர் அலுவலக கூடுதல் வளாகம்,பிங்கர் போஸ்ட், உதகை 643006 நீலகிரி மாவட்டம். தொலைபேசி எண்: 0423 2443392 முகவரிக்கு 31.07.2025 பிற்பகல் 5.45 மணி-க்குள் சமர்ப்பிக்குமாறு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

# சென்னை ராயபுரம் மற்றும் திரு.வி.க.நகர் மண்டலங்களில் தூய்மைப் பணிகளுக்கான வாகனங்கள்: மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்

சென்னை,ஜூலை.26

சென்னை மாநகராட்சியின் இராயபுரம் மற்றும் திரு. வி.க.நகர் மண்டலங்களில் தனியார் நிறுவனம் மூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்வதற்காக பேட்டரியால் இயங்கும் 40 மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் 12 சாலை பெருக்கும் இயந்திரங்கள் ஆகியவற்றினை மாண்புமிகு மேயர் ஆர்.பிரியா ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்து பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

**துவக்கம்**

இராயபுரம் மற்றும் திரு. வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உருவாகும் திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டுதானியங்கி வாகனங்கள் மூலம் உரிய இடங்களுக்கு கொண்டு செல்லும் பணிகள் மேற்கொள்ளப்படும். மண்டலம் 5 மற்றும் 6 ஆகிய இரண்டு மண்டலங்களில் 38.92 சதுர கிலோமீட்டர் பரப்பளவு மற்றும் 637.50 கி.மீ. சாலைகள் மற்றும் 30 வார்டுகள் உள்ளன. இவற்றில் 4,21,926 வீடுகள் உள்ளன. நாள்தோறும் சராசரியாக 0.655 கிலோ திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது.

இந்த மண்டலங்களில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, பேட்டரியால் இயங்கும் 1306 மூன்று சக்கர வாகனங்கள், தெருக்களை சுத்தம் செய்யும் 12 இயந்திர வாகனங்கள், 8 கியூபிக் மீட்டர் கொள்ளளவு கொண்ட 6 குப்பை நெறிப்படுத்தும் வாகனங்கள், 14 கியூபிக் மீட்டர் கொள்ளளவு கொண்ட 39 குப்பை நெறிப்படுத்தி வாகனங்கள், 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குப்பை நெறிப்படுத்தும் 4,005 குப்பைத் தொட்டிகள் 120 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2,286 தெரு துடைப்பு குப்பைத் தொட்டிகள், குப்பைத் தொட்டிகளை கழுவும் 1,504 இயந்திரங்கள் தோட்டக்கழிவுகள் அகற்றும் 5 வாகனங்கள் குப்பைத் தொட்டிகளை நகர்த்தும் 6 ஏந்தி இயந்திரங்கள் பேருந்து சாலைகளுக்கான 1,036 குப்பைத் தொட்டிகள், 39 நிலைத்த குப்பை நெறிப்படுத்திகள் ஹாட் ஸ்பாட் பகுதிக்கான 2 பெரிய வாகனங்கள், 2 சிறிய வாகனங்கள் திடமாக்கப்பட்ட 5 LMV வாகனங்கள் இந்த மண்டலங்களில் தூய்மைப் பணிக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

தமிழ்நாடு அரசு
**இராமநாதபுரம் மாவட்டம். சாயல்குடி பேரூராட்சி**

**ந.க.எண்.33/2025** **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** **நாள். 22.07.2025**

சாயல்குடி பேரூராட்சி அயோத்திதாஸ் பண்டிதர் மேம்பாட்டுத்திட்டம் 2025-2026 வார்டு எண்.10 குழையிருப்பு கண்மாய் தெருவில் சமுதாயகூடம் அமைத்தல் பணிக்கு ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) ஆன்லைன் வாயிலாக மட்டும் வரவேற்கப்படுகின்றன. பணியின் கால அளவு 180 நாட்கள்

மதிப்பீடு ரூ.90.00 இலட்சம்
வைப்புத் தொகை ரூ.90000/- (ரூபாய் தொன்னூறு ஆயிரம் மட்டும்)
ஆன்லைனில் மட்டும் செலுத்த வேண்டும்

1) ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை **https://tntenders.gov.in** மற்றும் **http://townpanchayats.tn.gov.in/tender** என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.

2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :

| | |
|---|---|
| அ ) முன் கலந்தாய்வு கூட்டம் | 31.07.2025 காலை 11.00 மணி |
| ஆ ) ஒப்பந்தப்புள்ளி ஆன்லைனில் சமர்ப்பித்தல் | 07.08.2025 மாலை 3.00 மணி வரை |
| இ) ஒப்பந்தப்புள்ளி ஆன்லைன் திறத்தல் | 07.08.2025 மாலை 3.30 மணி |

**செ.ம.தொ.இ /3835 / ஒப்பந்தப்புள்ளி /2025**

**செயல் அலுவலர்**
**சாயல்குடி பேரூராட்சி, இராமநாதபுரம் மாவட்டம்.**

சேலம் சிறப்பு மாவட்ட நீதிபதி நீதிமன்றம் சமூகம்
(மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாயம்)
**M.C.O.P.No. 2072/2024**

1. திவ்யப்ரியா, க/பெ.விஜயபாபு,
2. சிபிசக்கரவர்த்தி, த/பெ.முருகன்
இவர்களின் முகவரி : க.எண்.67/ஏ,
மேற்கு தெரு, கல்லேரிப்பட்டி அஞ்சல்,
ஆத்தூர் தாலுக்கா, சேலம் மாவட்டம் - 117.
…மனுதாரர்

இடையே

ஷாஜஹான், த/பெ. முஸ்தபா
க.எண்.37/53ஏ, அனைமேடு,
பாலக்காடு மெயின் ரோடு, குனியமுத்தூர்,
கோயம்புத்தூர் - 641008.
…1ம் எதிர்மனுதாரர்

<u>அறிவிப்பு</u>

மேற்படி மனுதாரர் மேற்படி 1 ம் எதிர்மனுதாரர் பேரில் மோட்டார் வாகன விபத்தில் திவ்யப்ரியா மற்றும் சிபி சக்கரவர்த்தி அவர்களின் தாயார் பொன்னம்மாள் இறந்தமைக்காக நஷ்டஈடு கோரி சேலம் சிறப்பு மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். மேற்படி மனு மேற்படி நீதிமன்றத்தில் வருகின்ற **06.08.2025** ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி 1 ம் எதிர்மனுதாரர் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ **06.08.2025** ம் தேதியன்று காலை 10.30 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை இருந்தால் தெரிவித்துக் கொள்ள வேண்டும். தவறும்பட்சத்தில் மேற்படி மனு உமக்கு எதிராக ஒருதலை பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/

K.K.மாதேஸ்வரன்,M.A.,B.L.,
O.S.சிவக்குமார்,M.A.,B.L.,
S.மணிகண்டன்,B.C.A.,L.L.B.,
வழக்கறிஞர்கள், சேலம்.

சேலம் சிறப்பு மாவட்ட நீதிபதி நீதிமன்றம் சமூகம்
(மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாயம்)
**M.C.O.P.No. 2077/2024**

1. திவ்யப்ரியா, க/பெ.விஜயபாபு,
2. சிபிசக்கரவர்த்தி, த/பெ.முருகன்
இவர்களின் முகவரி : க.எண்.67/ஏ,
மேற்கு தெரு, கல்லேரிப்பட்டி அஞ்சல்,
ஆத்தூர் தாலுக்கா, சேலம் மாவட்டம் - 117.
…மனுதாரர்

இடையே

ஷாஜஹான், த/பெ. முஸ்தபா
க.எண்.37/53ஏ, அனைமேடு,
பாலக்காடு மெயின் ரோடு, குனியமுத்தூர்,
கோயம்புத்தூர் - 641008.
…1ம் எதிர்மனுதாரர்

<u>அறிவிப்பு</u>

மேற்படி மனுதாரர் மேற்படி 1 ம் எதிர்மனுதாரர் பேரில் மோட்டார் வாகன விபத்தில் திவ்யப்ரியா மற்றும் சிபி சக்கரவர்த்தி அவர்களின் தந்தையார் முருகன் இறந்தமைக்காக நஷ்டஈடு கோரி சேலம் சிறப்பு மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். மேற்படி மனு மேற்படி நீதிமன்றத்தில் வருகின்ற **06.08.2025** ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி 1 ம் எதிர்மனுதாரர் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ **06.08.2025** ம் தேதியன்று காலை 10.30 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை இருந்தால் தெரிவித்துக் கொள்ள வேண்டும். தவறும்பட்சத்தில் மேற்படி மனு உமக்கு எதிராக ஒருதலை பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/

K.K.மாதேஸ்வரன்,M.A.,B.L.,
O.S.சிவக்குமார்,M.A.,B.L.,
S.மணிகண்டன்,B.C.A.,L.L.B.,
வழக்கறிஞர்கள், சேலம்.

## அதிக டெஸ்ட் அரைசதங்கள்:
# தோனியின் சாதனையை முறியடித்த ரிஷப் பண்ட்

**மான்செஸ்டர், ஜூலை 26-**
வெளிநாடுகளில் அதிக டெஸ்ட் அரைசதங்கள் அடித்த விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன் என்ற தோனியின் (8 அரைசதங்கள்) வாழ்நாள் சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.



**358 ரன்கள்...**
இங்கிலாந்து, இந்தியா கிரிக்கெட் அணிகள் இடையிலான 4-வது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஓல்டுடிராப்போர்டில் நடந்து வருகிறது. டாஸ் வென்ற இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் பந்து வீச்சை தேர்வு செய்தார். அதன்படி, முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 114.1 ஓவர்களில் 358 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. சாய் சுதர்சன் 61 ரன்களும், ஜெய்ஸ்வால் 58 ரன்களும், ரிஷப் பண்ட் 54 ரன்களும் எடுத்தனர்.

**ரிஷப் பண்ட் அசத்தல்...**
இந்திய அணியின் முதல் இன்னிங்சில் விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பாதியில் வெளியேறினார். ஆனாலும், காயத்தைப் பொருட்படுத்தாத ரிஷப் பண்ட் களமிறங்கி 2 சிக்சர் உட்பட 54 ரன்கள் அடித்து அசத்தினார்.

**புதிய சாதனை...**
இந்நிலையில், இந்த இன்னிங்சில் அடித்த அரைசதத்தையும் சேர்த்து ரிஷப் பண்ட் இங்கிலாந்தில் இது வரை 9 அரைசதங்கள் அடித்துள்ளார். இதன்மூலம் வெளிநாடுகளில் அதிக டெஸ்ட் அரைசதங்கள் அடித்த விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன் என்ற தோனியின் (8 அரைசதங்கள்) வாழ்நாள் சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.

## 4-வது டெஸ்ட் போட்டி:
# முன்னிலை பெற்ற இங்கிலாந்து



**மான்செஸ்டர், ஜூலை 26-**
மான்செஸ்டர் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் இந்தியாவை விட 2 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது.

**4-வது டெஸ்ட்...**
இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 4-வது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஓல்டுடிராப்போர்டில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 114.1 ஓவர்களில் 358 ரன்களுக்கு ஆல்-அவுட் ஆனது. அதிகபட்சமாக சாய் சுதர்சன் 61 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் 5 விக்கெட்டுகளும், ஜோப்ரா ஆர்ச்சர் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

**சிறப்பான பேட்டிங்...**
இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 2-வது நாள் ஆட்டநேர முடிவில் 46 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 225 ரன்கள் அடித்திருந்தது. ஆலி போப் 20 ரன்களுடனும், ஜோ ரூட் 11 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். தொடக்க ஆட்டக்காரர்களான ஜாக் கிராவ்லி 84 ரன்களிலும், பென் டக்கட் 94 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். இத்தகைய சூழலில் 3-வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து ஜோ ரூட் மற்றும் போப் சிறப்பாக பேட்டிங் செய்தனர்.

**சோபிக்காத பவுலிங்...**
இந்த இன்னிங்சில் இந்திய அணியின் பந்துவீச்சு அவ்வளவு சிறப்பாக அமையவில்லை. இந்திய முன்னணி பந்துவீச்சாளர்களான பும்ரா மற்றும் சிராஜ் ஆகியோரால் எந்த வித தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. இதனால் இங்கிலாந்து அணி வலுவான நிலையை நோக்கி பயணித்தது. பென் டக்கட் - கிராவ்லி கூட்டணி போல ஜோ ரூட் - ஆலி போப் கூட்டணியும் சிறப்பாக விளையாடியது. இருவரும் அரைசதம் அடித்து அசத்தினர். இதனால் முதல் இன்னிங்சில் இங்கிலாந்து முன்னிலையை நோக்கி பயணிக்கிறது.

**போப் 71 ரன்கள்...**
உணவு இடைவேளைக்கு முன்பு வரை இங்கிலாந்து அணி 74 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 332 ரன்கள் அடித்திருந்தது. ஜோ ரூட் 63 ரன்களுடனும், ஆலி போப் 70 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். உணவு இடைவேளைக் குப்பின் இந்திய பந்துவீச்சை வாஷிங்டன் சுந்தர் தொடங்கினார். அவரது பந்துவீச்சில் ஆலி போப் (71 ரன்கள்) மற்றும் அவரை தொடர்ந்து களமிறங்கிய ஹாரி புரூக் (3 ரன்கள்) ஆட்டமிழந்தனர். அடுத்தது ஜோ ரூட்டுடன், கேப்டன் பென் ஸ்டோக்ஸ் கூட்டணி சேர்ந்துள்ளார்.

**2 ரன்கள் முன்னிலை...**
இங்கிலாந்து அணி தற்போது வரை 87 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 360 ரன்கள் அடித்து பேட்டிங் செய்து வருகிறது. இதன் மூலம் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் இந்தியாவை விட 2 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது.

## 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி:
# ஜோ ரூட் வரலாற்று சாதனை

**மான்செஸ்டர், ஜூலை 26-**
டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக ரன் குவித்த 3-வது வீரர் என்ற மாபெரும் சாதனையை ஜோ ரூட் படைத்துள்ளார்.

**4-வது டெஸ்ட்...**
இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 4-வது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஓல்டுடிராப்போர்டில் தொடங்கியது. இதில் முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 114.1 ஓவர்களில் 358 ரன்களுக்கு ஆல்-அவுட் ஆனது. அதிகபட்சமாக சாய் சுதர்சன் 61 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் கேப்டன் பென்ஸ்டோக்ஸ் 5 விக்கெட்டுகளும், ஜோப்ரா ஆர்ச்சர் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

**சிறப்பான தொடக்கம்...**
இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்களான ஜாக் கிராவ்லி - பென் டக்கட் ஜோடி வலுவான அஸ்திவாரம் போட்டனர். இருவரும் 166 ரன்கள் சேர்த்த நிலையில் பிரிந்தனர். ஜாக் கிராவ்லி 84 ரன்களில், ஜடேஜாவின் சுழலில் கேட்ச் ஆனார். பென் டக்கட் 94 ரன்களில் (100 பந்து, 13 பவுண்டரி) அறிமுக வேகப்பந்து வீச்சாளர் அன்ஷூல் கம்போஜின் பந்து வீச்சில் விக்கெட் கீப்பர் ஜூரெலிடம் சிக்கினார். இது அவரது முதல் சர்வதேச விக்கெட்டாக அமைந்தது. 2-வது நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 46 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 225 ரன்கள் அடித்திருந்தது.

**3-வது வீரர்...**
தொடர்ந்து ஜோ ரூட் மற்றும் போப் பேட்டிங் செய்தனர். இதில் ஜோ ரூட் 31 ரன்கள் அடித்திருந்தபோது டெஸ்ட் கிரிக்கெட்டில் அவர் அடித்த ரன்களின் எண்ணிக்கை 13,290 ஆக உயர்ந்தது. இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக ரன் குவித்த 3-வது வீரர் என்ற மாபெரும் சாதனையை படைத்துள்ளார்.

**டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ரன்:**
1. சச்சின் தெண்டுல்கர் - 15,921 ரன்கள்
2. ரிக்கி பாண்டிங் - 13,378 ரன்கள்
3. ஜோ ரூட் - 13,290* ரன்கள்
4. ஜாக் காலிஸ் - 13,289 ரன்கள்
5. ராகுல் டிராவிட் - 13,288 ரன்கள்

# நியூசி. வீரர் புதிய சாதனை

நியூசிலாந்து அணி ஜிம்பாப்வேவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு முத்தரப்பு டி20 தொடரில் விளையாடி வருகிறது. இந்த தொடரில் நேற்று முன்தினம் (ஜூலை 24) நடைபெற்ற போட்டியில் நியூசிலாந்து மற்றும் ஜிம்பாப்வே அணிகள் விளையாடின. இப்போட்டியில் நியூசிலாந்து அணி 60 ரன்கள் வித்தியாசத்தில் ஜிம்பாப்வேயை வீழ்த்தியது. முதலில் விளையாடிய நியூசிலாந்து 190 ரன்கள் குவிக்க, ஜிம்பாப்வே 130 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

இந்தப் போட்டியில் அபார பந்துவீச்சை வெளிப்படுத்திய நியூசிலாந்து சுழற்பந்துவீச்சாளர் ஈஷ் சோதி, 4 ஓவர்களில் வெறும் 12 ரன்களை மட்டும் விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதன் மூலம், நியூசிலாந்து அணிக்காக டி20 கிரிக்கெட்டில் 150 விக்கெட்டுகளை கைப்பற்றிய 2வது வீரர் என்ற சாதனையை அவர் படைத்தார். அவருக்கு முன்பாக, முன்னாள் வேகப் பந்துவீச்சாளர் டிம் சௌதி 164 விக்கெட்டுகளுடன் முதலிடத்தில் உள்ளார். ஜிம்பாப்வேக்கு எதிராக ஈஷ் சோதி பந்துவீசியது, சர்வதேச டி20 கிரிக்கெட்டில் சிறந்த பந்துவீச்சு என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா-மாலத்தீவுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து



**மாலி, ஜூலை 26-**
பிரதமர் மோடி , மாலத்தீவு அதிபர் முகமது முய்சு முன்னிலையில் இந்தியா-மாலத்தீவுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

பிரதமர் மோடி இங்கிலாந்து, மாலத்தீவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இங்கிலாந்து பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் மோடி நேற்று முன்தினம் இரவு மாலத்தீவு புறப்பட்டார். அவர் இன்று தனி விமானம் மூலம் மாலத்தீவு சென்றடைந்தார். 2 நாட்கள் பயணமாக மாலத்தீவு சென்றுள்ள பிரதமர் மோடியை அந்நாட்டின் அதிபர் முகமது முய்சு விமான நிலையத்திற்கு நேரில் சென்று வரவேற்றார்.

இதனை தொடர்ந்து இருநாட்டு தலைவர்களும் இரு நாட்டு உறவு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்த உள்ளனர். முன்னதாக மாலத்தீவின் மாலேவில் உள்ள குடியரசு சதுக்கத்தில், இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் இந்திய அரசின் பிற அதிகாரிகளை முகமது முய்சு சந்திக்கிறார். அவர்களை முகமது முய்சுவிற்கு பிரதமர் மோடி அறிமுகம் செய்து வைத்தார்.

இந்நிலையில், பிரதமர் மோடி , மாலத்தீவு அதிபர் முகமது முய்சு முன்னிலையில் இந்தியா-மாலத்தீவுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தியா நிதியுதவியுடன் மாலத்தீவு ஹுல்ஹு மாலேயில் 3,300 வீடுகள், அட்டு நகரில் சாலைகள் மற்றும் வடிகால் திட்டம் தொடக்கம், இந்தியா-மாலத்தீவு இடையே சுதந்திர வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகளை தொடங்க இருநாடுகளும் சம்மதம், இந்திய அரசு மாலத்தீவு பாதுகாப்பு அமைச்சகத்திற்கு 72 கனரக வாகனங்களை வழங்குதல் உள்ளிட்ட அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

# ஹைட்ரஜனில் இயங்கும் ரயில் இன்ஜின் சோதனை வெற்றி
## சென்னை ஐ.சி.எப். சாதனை

**புதுடில்லி, ஜூலை 26-**
ஹைட்ரஜனில் இயங்கும் ரயில் இன்ஜின் சோதனை ஓட்டம் வெற்றி அடைந்தது என மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சென்னை பெரம்பூரில் உள்ள ஐ.சி.எப்., ஆலையில், 175 வகைகளில், 600 வடிவமைப்புகளில், ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. சுற்றுச் சூழலை பாதுகாக்கும் நோக்கில், முதல் ஹைட்ரஜன் ரயில் தயாரிக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

தற்போது பணிகள் அனைத்து நிறைவடைந்து உள்ளன. பழைய ரயில் இன்ஜின்கள் நீக்கப்பட்டு புதிய ஹைட்ரஜன் ரயில் இன்ஜின்கள் பல வழித்தடங்கள் அறிமுகம் ஆக உள்ளது. இந்நிலையில், சென்னை, ஐ.சி.எப்.,யில் ஹைட்ரஜன் மூலம் இயங்கும் முதல் ரயில் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடந்தது.ஹைட்ரஜனில் இயங்கும் ரயில் இன்ஜின் சோதனை ஓட்டம் வெற்றி அடைந்தது என அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். மேலும் அவர், ''கார்பன் வெளியேற்றத்தை குறைத்து சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக ஹைட்ரஜன் ரயில்கள் இருக்கும். ஹைட்ரஜன் ரயில் தொழில்நுட்பம் இந்தியாவை முன்னணி நாடுகளில் ஒன்றாக மாற்றும்'' என்றார்.

# பீகாரில் 65.6 லட்சம் வாக்காளர்கள் பெயர் நீக்கம்: தேர்தல் ஆணையம்

**புதுடில்லி, ஜூலை 26-**
பீகாரில் 65.6 லட்சம் வாக்காளர்கள் பெயர் நீக்கி இந்திய தேர்தல் ஆணையம் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பீகாரில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த நடைமுறை நிறைவுப் பெற்றுள்ளது. பீகாரில் 7.23 கோடி வாக்காளர்களின் படிவங்கள் பெறப்பட்டு டிஜிட்டல் மயமாக்கும் பணி நிறைவு பெற்றதாக இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணிகளை 99.8 சதவீதம் நிறைவு செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. அதன்படி, பீகாரில் 65.6 லட்சம் வாக்காளர்கள் பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. உயிரிழந்த 22 லட்சம் பேரின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளது.

பீகாரில் ஒரு லட்சத்து இருபதாயிரம் வாக்காளர்கள் தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவில்லை எனவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# ரிஷப் பண்ட்டுக்கு பாராட்டு

இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதும் 4-வது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் நடந்து வருகிறது. 2-ம் நாள் ஆட்டத்தில் இந்தியா 358 ரன்னுக்கு ஆல்-அவுட் ஆனது. இப்போட்டியின் முதல் நாளில் கிறிஸ் வோக்ஸ் வீசிய யார்க்கர் பந்தில் ரிஷப் பண்ட் வலது கால் விரலில் காயம் அடைந்தார். வலியால் துடித்த அவர் பாதியில் வெளியேறினார். 2-ம் ஆட்டத்தின் போது ஷர்துல் தாக்கூர் விக்கெட் விழுந்ததும் கால் காயத்துடன் ரிஷப் பண்ட் களம் இறங்கினார்.

இந்த நிலையில் காயத்துடன் பேட்டிங் செய்த ரிஷப் பண்ட் குறித்து டெண்டுல்கர் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் கூறியதாவது:- ரிஷப் பண்ட் காயத்துடன் மீண்டும் விளையாட வந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி மகத்தான தன்மையைக் காட்டினார். அவரது 50 ரன்கள், உங்கள் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்து வதற்கு தேவையான மன உறுதியை நினைவூட்டுகிறது. இந்த துணிச்சலான முயற்சி நீண்ட காலம் நினைவில் வைக்கப்படும் என்றார்.

# ஆர்.சி.பி. அணி மீது வழக்கு

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணி (ஆர்.சி.பி.) முதல்முறையாக வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது.இதையடுத்து நடைபெற்ற பாராட்டு விழாவில் கூட்ட நெரிசல் ஏற்பட்டு 11 பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில், கர்நாடக அமைச்சரவை கூட்டம் முதல்வர் சித்தராமையா தலைமையில் பெங்களூருவில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், கூட்ட நெரிசலில் 11 பேர் பலியான விவகாரம் குறித்து நீதிபதி குன்கா விசாரணை ஆணையம் அளித்துள்ள அறிக்கை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு, அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள அம்சங்களை ஏற்பது என்று ஒரு மனதாக தீர்மானிக்கப்பட்டது. இதில் ஆர்.சி.பி. அணி நிர்வாகம், கர்நாடக மாநில கிரிக்கெட் சங்கம், தனியார் நிகழ்ச்சி ஏற்பாட்டு நிறுவனம், போலீசார் மீது கிரிமினல் வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என தகவல் வெளியாகி இருக்கிறது.

# மாலத்தீவு அதிபருடன் பிரதமர் மோடி சந்திப்பு



**மாலே, ஜூலை 26-**
2 நாட்கள் பயணமாக மாலத்தீவு சென்ற பிரதமர் மோடி அதிபர் மொய்சுவை சந்தித்து பேசினார்.

பிரதமர் மோடி இங்கிலாந்து, மாலத்தீவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். முன்னதாக இங்கிலாந்து சென்ற பிரதமர் மோடி, அந்நாட்டு பிரதமர் கெய்ர் ஸ்டார்மரை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது இருநாடுகளுக்கு இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் உள்பட முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதனை தொடர்ந்து இங்கிலாந்து மன்னர் சார்லசை பிரதமர் மோடி சந்தித்தார்.

இந்நிலையில், இங்கிலாந்து பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் மோடி நேற்று முன்தினம் இரவு மாலத்தீவு புறப்பட்டார். அவர் இன்று தனி விமானம் மூலம் மாலத்தீவு சென்றடைந்தார். 2 நாட்கள் பயணமாக மாலத்தீவு சென்றுள்ள பிரதமர் மோடியை அந்நாட்டின் அதிபர் முகமது முய்சு விமான நிலையத்திற்கு நேரில் சென்று வரவேற்றார்.

இதனை தொடர்ந்து இரு நாட்டு தலைவர்களும் இரு நாட்டு உறவு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்த உள்ளனர். முன்னதாக மாலத்தீவின் மாலேவில் உள்ள குடியரசு சதுக்கத்தில், இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் இந்திய அரசின் பிற அதிகாரிகளை முகமது முய்சு சந்திக்கிறார். அவர்களை முகமது முய்சுவிற்கு பிரதமர் மோடி அறிமுகம் செய்து வைத்தார்.

தொடர்ந்து இன்று நடைபெறும் மாலத்தீவின் 60-வது சுதந்திர தின விழாவில் பிரதமர் மோடி சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார். இதையடுத்து, மாலத்தீவு பயணத்தை நிறைவு செய்யும் பிரதமர் மோடி இன்று மாலை இந்தியா திரும்புகிறார்.

## பார்லி., 5-வது நாளாக முடங்கியது:
# வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்

**புதுடெல்லி, ஜூலை 25-**
வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தை எதிர்த்து எதிர்க்கட்சியினரின் கடும் அமளியால் நேற்று 5-வது நாளாக பாராளுமன்ற இரு அவைகளின் நடவடிக்கைகள் முடங்கின.

சட்டசபை தேர்தலுக்கு தயாராகி வரும் பீகாரில், வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தத்தை தேர்தல் கமிஷன் மேற்கொண்டு வருகிறது. இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் எதிர்க்கட்சிகள், இந்த பிரச்சினை குறித்து பாராளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி வருகின்றன. ஆனால் அரசு இதற்கு இதுவரை செவிசாய்க்கவில்லை.

இதனால் பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் புயல் வீசி வருகிறது. இதன் காரணமாக கடந்த 21-ந்தேதி தொடங்கிய பாராளுமன்ற தொடரில் இதுவரை குறிப்பிடத்தக்க அலுவல் எதுவும் நடைபெறவில்லை. இந்த பாராளுமன்ற முடக்கம் நேற்று 5-வது நாளாக நீடித்தது. அந்தவகையில் பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் நேற்று பகல் 11 மணிக்கு மக்களவை கூடியதும் எதிர்க்கட்சிகள் பீகார் மாநில சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரச்சினை கிளப்பினார்கள். இதனால் சபையில் கடும் அமளி ஏற்பட்டது.

கடும் கூச்சல் நிலவியதால் சபை 2 தடவை ஒத்தி வைக்கப்பட்டது. தொடர்ந்து மீண்டும் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் நேற்று நாள் முழுக்க மக்களவை ஒத்திவைக்கப்பட்டது. திங்கள் கிழமை மீண்டும் பாராளுமன்றம் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக காங்கிரஸ் தலைவர்கள் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷங்களை எழுப்பினர். பாராளுமன்ற வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலையின் கீழ் எதிர்க்கட்சித் தலைவர்கள் 'சர்' என்று எழுதப்பட்ட சுவரொட்டிகளை ஏந்தி அவற்றை கிழித்து குப்பைத் தொட்டியில் வீசினர்.

# புதிய துணை ஜனாதிபதியை தேர்வு செய்யும் நடைமுறைகள் தொடக்கம்
## தேர்தல் அதிகாரிகள் நியமனம்

**புதுடில்லி, ஜூலை 26-**
புதிய துணை ஜனாதிபதியை தேர்வு செய்யும் நடைமுறைகளை மத்திய உள்துறை அமைச்சகம் தொடங்கியுள்ளது. தேர்தல் அதிகாரிகளை தேர்தல் ஆணையம் நியமித்தது.

துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் கடந்த 21-ந்தேதி தனது பதவியை ராஜினாமா செய்தார். இதனை தொடர்ந்து அவரது ராஜினாமா ஏற்கப்பட்டது. ஜனாதிபதியை முன் அனுமதி பெறாமல் திடீரென சந்தித்து அவர் பதவி விலகியது நாடு முழுவதும் அரசியல் வட்டாரத்தில் ஆச்சரியத்தை உருவாக்கியது. அவரது பதவி விலகலுக்கு பின்னணியில் பல்வேறு காரணங்கள் இருப்பதாக கூறப்பட்டது.

துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கரின் ராஜினாமாவை ஜனாதிபதி முர்மு ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து மத்திய உள்துறை அமைச்சகம் முறைப்படி அறிவித்தது. இதுதொடர்பாக உள்துறை செயலாளர் கோவிந்த் மோகன் கையெழுத்திட்ட அறிவிப்பாணை வெளியிடப்பட்டது. மேலும், இது குறித்து மாநிலங்களவையில் உறுப்பினர்களுக்கும் முறைப்படி தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே புதிய துணை ஜனாதிபதியை தேர்வு செய்ய ஏற்பாடுகள் தொடங்கியது. துணை ஜனாதிபதி தேர்தல் அதிகாரிகளை தேர்தல் ஆணையம் நியமித்தது. மாநிலங்களவை செயலாளர் பிரமோத் சந்திரா மோடி தேர்தல் நடத்தும் அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். மாநிலங்களவை இணைச் செயலாளராக கரீமா ஜெயின், மாநிலங்களவை இயக்குனர் விஜயகுமார் உதவி தேர்தல் அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

# கும்மிடிப்பூண்டி சிறுமி பாலியல் வன்கொடுமை: ஒருவர் கைது

**சூலூர்பேட்டை, ஜூலை 26-**
திருவள்ளூர் மாவட்டம், ஆரம்பாக்கத்தில் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில், சூலூர்பேட்டையில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி அருகே கடந்த 12ஆம் தேதி வட மாநில இளைஞரால் 8 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்த தனிப்படைகள் 30 ஆக அதிகரிக்கப்பட்டு, குற்றவாளி தேடப்பட்டு வந்தார்.

இந்த நிலையில், சூலூர்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து, ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், ரயில் நிலையத்தின் மூன்றாவது நடைமேடையில் அதே உடையுடன் நின்றிருந்த நபரை காவல்துறையினர் அடையாளம் கண்டு கைது செய்திருப்பதாகவும், அவரது புகைப்படத்தை சிறுமியிடம் காட்டி அவர்தான் குற்றவாளியா என்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாக, சம்பவம் நடந்தபோது, அப்பகுதியிலிருந்த சி.சி.டிவி.யில், ஒருவர், பள்ளிச் சிறுமியை கடத்திச் செல்வது பதிவாகியிருந்தது. மேலும் ஒரு சி.சி.டிவி.யில் அவரது முகம் தெளிவாகப் பதிவாகியிருந்த நிலையில், அவரைப் பற்றி தகவல் தெரிவிப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும், அடையாளம் ரகசியமாக வைக்கப்படும் என்று அறிவித்து, காவல்துறையினர் குற்றவாளியை தேடி வந்தனர்.

ஏற்கனவே, சந்தேகத்தின் அடிப்படையில் ஒரு சிலர் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். அவர்களது புகைப்படங்களும் சிறுமியிடம் காண்பிக்கப்பட்டு, அதனை அவர் மறுத்திருந்த நிலையில் தற்போது பிடிபட்டவரை சிறுமி அடையாளம் காட்டியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

### ஒட்டன்சத்திரம், அம்பிளிக்கையில்
# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: மக்களிடம் இருந்து மனுக்களை பெற்றார் அமைச்சர் சக்கரபாணி



**ஒட்டன்சத்திரம், ஜூலை 26-**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி, அம்பிளிக்கை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் கலந்துகொண்டு, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கள் துறை அமைச்சர் அர. சக்கரபாணி பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறார்கள். ஆட்சிப் பொறுப்பேற்ற 51 மாத காலத்தில் தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றியதோடு, சொல்லாத எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அரசின் திட்டங்கள் அனைத்தும் ஜாதி, மதம், இனம், கட்சி பாகுபாடு இன்றி அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கிடைக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.திண்டுக்கல் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 360 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்களுக்கும் அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறையின் சேவைகள், திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத்துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சேர்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனை பேணும் வகையில் மருத்துவ சேவைகளை வழங்க மருத்துவ முகாம்களும் நடத்தப்படும். மேலும் இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்களில் மட்டுமே வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒரு நாளில் 24 மணி நேரத்தில் 20 பணி நேரம் தமிழ்நாட்டு மக்களின் மேம்பாட்டுக்காக உழைக்கிறார். இந்தியாவிலேயே தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. பொதுமக்கள், விவசாயிகள், மாணவ, மாணவிகள் என அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் அவர்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கையை பூர்த்தி செய்யும் விதமாக எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி முதலமைச்சர் கரங்களை வலுப்படுத்தும் விதமாக என்றென்றும் உறுதுணையுடன் இருக்க வேண்டும், என பேசினார். இந்த முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டதன் அடிப்படையில், 2 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லம் திட்ட அனுமதி, 2 பயனாளிகளுக்கு மருத்துவக் காப்பீடு அட்டை மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களை அமைச்சர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், உதவித் திட்ட அலுவலர்(வீடுகள்) பிரபாகரன், ஒட்டன்சத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காமராஜ், பிரபுபாண்டியன், வட்டாட்சியர் சஞ்சைகாந்தி, ஒட்டன்சத்திரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத் தலைவர் ராஜாமணி ஒன்றிய செயலாளர்.எஸ். ஆர். கே. பாலு உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். படம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி அம்பிளிக்கையில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் அமைச்சர் அர. சக்கரபாணி பேசினார்.


### திண்டுக்கல் அருகே
# அகரம் முத்தாலம்மன் கோவிலில் ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம்



**திண்டுக்கல், ஜூலை 26-**

திண்டுக்கல் மாவட்டம் தாடிக்கொம்பு அருகே உள்ள அகரம் கிராமத்தில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ அகர முத்தாலம்மன் ஆலயம் உள்ளது. இக்கோவிலில் ஆடி மாத 2 வது வெள்ளிக்கிழமை என்பதால் நேற்று ஸ்ரீ அகர முத்தாலம்மனுக்கு வளையல் அலங்காரம் மற்றும் தெப்ப ஊஞ்சல் உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. அதன் பிறகு காலை 11:30 மணி அளவில் தெப்ப வளையல் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மதியம் 12 மணி அளவில் பூஜை தீபாராதனை நடைபெற்றது.

இதனை தொடர்ந்து ஸ்ரீ அகரம் முத்தாலம்மன் உள்புற சன்னதியிலும் வெளிப்புறத்திலும் வளையல்களால் பந்தல் அமைக்கப்பட்டு அம்மனுக்கு வளையல்களை கொண்டு சிறப்பு அலங்காரம் தீப ஆராதனை நடைபெற்றது. இதனையடுத்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பரம்பரை நிர்வாக அறங்காவலர் மாரிமுத்து மற்றும் பரம்பரை அறங்காவலர்கள் ஆகியோர் செய்திருந்தனர்.



**அருப்புக்கோட்டை முத்துமாரியம்மன் கோவிலில் ஆடி மாத 2-வது வெள்ளிக்கிழமையை முன்னிட்டு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்று சிறப்பு அலங்காரத்தில் பொதுமக்களுக்கு அருள்பாலித்த காட்சி.**

# விருதுநகர் - அருப்புக்கோட்டை ஊராட்சி பகுதியில் வளர்ச்சி பணிகள்: கலெக்டர் சுகபுத்ரா நேரில் ஆய்வு



**விருதுநகர், ஜூலை 26-**

விருதுநகர் மற்றும் அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், அருப்புக்கோட்டை கோவிலாங்குளம் அருகில் சிப்காட் அமையவுள்ள இடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு செய்து, சிப்காட் திட்ட செயல்பாடுகள் குறித்து அரசு அலுவலர்களிடம் கேட்றிந்தார். அருப்புக்கோட்டை மண்டல ஆராய்ச்சி நிலையத்தில், விதை உற்பத்தி மையம், விதை சுத்திகரிப்பு மற்றும் சேமிப்பு கிடங்கினை பார்வையிட்டு, அங்கு கால்நடைகள் வளர்த்தல் விதம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டறிந்து ஆய்வு செய்தார். அதனை தொடர்ந்து, காரியாபட்டி வட்டம் தோணுகால் கிராமத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் என்ற சிறப்பு முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு மின்சாரத் துறையில் பெயர் மாற்றம் செய்வதற்கு மனு அளித்த நபருக்கு மின் இணைப்பில் பெயர் மாற்றம் செய்த ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

மேலும், தோட்டக்கலைத்துறை சார்பில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு காய்கறி விதைத்தொகுப்பு, பழக்கன்றுகள் தொகுப்பு மானியத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் விவசாயிகளுக்கு வழங்கினார். இந்த ஆய்வின் போது, வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் இருந்தனர்.



**திருமங்கலம் சட்டமன்ற தொகுதி கள்ளிக்கு ஒன்றியத்திலுள்ள கள்ளிக்குடி,வெள்ளாகுளம், ஆவல்சூரன்பட்டி, மையிட்டான்பட்டி, நல்லமநாயக்கன்பட்டி பகுதி கிராம மக்கள் பயன் பெற்றிடும் வகையில் அரசின் சார்பில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமினை மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் நேரில் பார்வையிட்டு, மக்களின் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுத்திடுமாறு அதிகாரிகளைகேட்டுக்கொண்டார்.இந்நிகழ்வில்கள்ளிக்குடிதெற்குஒன்றியகழகச்செயலாளர் மதன்குமார் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**

# பா.ம.க. தலைவர் ராமதாஸ் பிறந்தநாள் விழா




**ஒட்டன்சத்திரம், ஜூலை 27-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகேயுள்ள விருப்பாச்சி துர்கா ஹோம் இல்லத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ராமதாஸ் பிறந்த நாளை முன்னிட்டு குழந்தைக்கு திண்டுக்கல் வடக்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாவட்ட செயலாளர் க.ஜோதிமுத்து தலைமையில் உணவு வழங்கப்பட்டது.

ராமதாஸ் பிறந்த நிகழ்வில் திண்டுக்கல் மாவட்ட அமைப்பு செயலாளர் ஜே.இளவரசு, திண்டுக்கல் மாவட்ட பொருளாளர் ரா.மகேஸ்வரி, தமிழ்நாடுஉழவர் பேரியக்கமாவட்ட செயலாளர் ம.மணிவேல், தொழிற்சங்க மாவட்ட செயலாளர் செ.சரவணக்குமார், ஒன்றிய செயலாளர்கள் ரா.ராஜ்கமல், பெருமாள் உள்ளிட்ட சின்னத்துரை, வினித்குமார், முத்துமாணிக்கம், ஐய்யப்பன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஆடி மாத இரண்டாவது வெள்ளி: நத்தம் மாரியம்மன் கோவிலில் பக்தர்கள் தரிசனம்



**நத்தம், ஜூலை 26-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மாரியம்மன் கோவிலில் ஆடி மாத 2-வது வெள்ளிக்கிழமையையொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது.தொடர்ந்து மாரியம்மனுக்கு 16 வகையான சிறப்பு அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது.வெள்ளி கவச அலங்காரத்தில் அம்மன் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தொடர்ந்து கோவில் முன்பாக அன்னக்கூழ் ஊற்றப்பட்டது.இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்தும், வெளி மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து தரிசனம் செய்தனர். இதைப்போலவே அசோக்நகர் பகவதி அம்மன், மீனாட்சிபுரம், காமராஜ்நகர் காளியம்மன்,ராக்காயி அம்மன், தில்லை காளியம்மன், வாராஹி அம்மன் உள்ளிட்ட பல்வேறு கோவில்களில் ஆடி 2-வது வெள்ளிக்கிழமையயொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது. இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# அரியூர்பட்டியில் சூலப்பிடாரி அம்மன் கோவில் ஆடி அமாவாசை திருவிழா



**மேலூர், ஜூலை 26-**

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், சருகு வலையபட்டி சேகரம், அரியூர்பட்டியில் அமைந்துள்ள ஸ்ரீ சூலப்பிடாரி அம்மன், ஸ்ரீ மணிச்சூரன் சுவாமி, ஸ்ரீ காக்கர கருப்புச்சாமி திருக்கோவிலின் 18ம் ஆண்டு ஆடி அமாவாசை விழாவை முன்னிட்டு ஏழு தாய் மக்கள் வத்ரான் முத்தரி மூன்று கரைகாரர்கள் நடத்தும் ஆடி மாததிருவிழா நேற்று நடைபெற்றது. வீரகாளியம்மன் , மணிச்சூரன் மந்தையில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் பூத்தட்டு எடுத்து சூலப்பிடாரி அம்மன், மணிச்சூரன், காக்கர கருப்புச் சாமி கோவிலுக்கு சென்று அம்மனுக்கு விசேஷ பூஜை செய்து மாலை அணிவித்து சாமி தரிசனம் செய்தனர். சாமியாட்டம் நடைபெற்றது.

கோவில் முன்பு அமைக்கப்பட்டிருந்த அன்னதானத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அறுசுவை விருந்து பரிமாறப்பட்டது. அருகில் சுற்றுப்புற கிராமங்களான சருகு வலையப்பட்டி, அரியூர்பட்டி, வடக்குவலையப்பட்டி, மெய்யப்பன் பட்டி, மணப்பட்டி, ஒத்த பட்டி, லெட்சுமிபுரம், அண்ணா நகர் ஆகிய கிராமங்களிலிருந்து அன்னதானத்தில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். திருவிழா ஏற்பாட்டினை சருகுவலையபட்டி சேகரம், அரியூர் பட்டி, கிராம பொதுமக்கள், வத்ரான் வகையறாவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# பரமக்குடியில் புத்தகத் திருவிழா: மாணவர்கள், பொதுமக்கள் பங்கேற்பு



**பரமக்குடி, ஜூலை 26-**

பரமக்குடி ஓட்டப் பாலம் அருகில் உள்ள ராஜா மகாலில் மூன்றாம் ஆண்டு புத்தகத் திருவிழா நேற்று முதல் துவங்கியது. இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் மக்கள் நூலகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் மூன்றாம் ஆண்டு புத்தகத் திருவிழா நேற்று முதல் துவங்கியது. புத்தகத் திருவிழாவின் வரவேற்புக் குழு தலைவர் சேகர் தலைமை தாங்கினார். மக்கள் நூலகத் தலைவர் நல்லாசிரியர் சந்தியாகு, தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாவட்ட செயலாளர் காந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். புத்தகத் திருவிழா வரவேற்புக் குழு செயலாளர் வழக்கறிஞர் பசுமலை வரவேற்புரையாற்றினார். விழாவில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்து புத்தக அரங்கினை திறந்து வைத்தார். மேலும் நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி,பரமக்குடி வட்டாட்சியர் வரதன் , நகர் மன்ற உறுப்பினர் பிரபா சாலமன், திமுக ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், அண்ணாமலை,கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

வரவேற்புக் குழு துணைச் செயலாளர் ராஜா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.புத்தகத்திருவிழாவை முன்னிட்டு நாள்தோறும் சிறப்புப்பேச்சாளர்கள், இன்னிசை பட்டிமன்றம், எழுத்தாளர்களின் நூல் வெளியீட்டு விழா நடைபெற உள்ளது.நாள்தோறும் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள்,பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டிகள் நடைபெறுகிறது. மேலும் ஆகஸ்ட் 3ஆம் தேதி புத்தகங்கள் வாசிப்பு மற்றும் போதை ஒழிப்புக் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மினி மராத்தான் போட்டியும் நடைபெறுகிறது.இந்நிகழ்ச்சியில் மாணவர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். விழாவில் 10 நாட்கள் மாலை நேரத்தில் பல்சுவை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.வரவேற்புக் குழு பொருளாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

# நத்தம் அருகே புனித சந்தியாகப்பர் கோவில் தேர்பவனி கோலாகலம்



**நத்தம், ஜூலை 26-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே ஊராளிபட்டியில் புனித சந்தியாகப்பர் கோவில் திருவிழா கடந்த 21-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தொடர்ந்து இரண்டு நாட்கள் நவநாள் கூட்டு திருப்பலிகள் நடந்தது. திருவிழாவின் முக்கிய நிகழ்வான சந்தியாகப்பர் மின் ரதத்தில் நகர்வலம் செல்லும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் இரவு நடந்தது.இதில் அலங்கரிக்கப்பட்ட மின் ரதத்தில் சந்தியாகப்பர் எழுந்தருளி ஊரின் முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்தார்.தொடர்ந்து நேற்று காலை நற்கருணை ஆசிர்வாதம் நிகழ்ச்சியும், அன்னதானமும் நடைபெற்றது.பின்னர் மாலையில் கொடியிறக்கம் நடந்தது.இதில் சுற்றுவட்டாரங்களை சேர்ந்த ஏராளமான கிறிஸ்தவ மக்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை பங்குத் தந்தையர்கள் தோமினிக் சேவியர், ஜான்பிரிட்டோ, ஜெரால்டு ஸ்டீபன் செல்வா மற்றும் ஊராளிபட்டி கிறிஸ்தவ இறைமக்கள் செய்திருந்தனர்.

# வத்தலக்குண்டு ஒன்றியத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்



**வத்தலக்குண்டு, ஜூலை 26-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டுவில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடந்தது. வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம் கோம்பைபட்டி ஊராட்சிமற்றும் கோட்டைப்பட்டி ஊராட்சி யினருக்காகநடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் துவக்க விழாவுக்கு நிலக்கோட்டை தாசில்தார் விஜயலட்சுமி தலைமை வகித்தார்.

வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குப்புசாமி, மணிமாற பாண்டியன், திமுக ஒன்றிய செயலாளர்கள் கே.பி.முருகன், கனகதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கோம்பைப்பட்டி ஊராட்சி மன்ற செயலர் பிரபு, கோட்டைப்பட்டி ஊராட்சி மன்ற செயலாளர் கருணாகரன் ஆகியோர் அனைவரையும் வரவேற்றார்கள், வத்தலக்குண்டு வருவாய் ஆய்வாளர் பரிமளம், கிராம நிர்வாக அலுவலர்கள் வத்தலகுண்டு சரண்யா நாகேந்திரன், கோம்பைப் பட்டி கிராம நிர்வாக அலுவலர் பாண்டியராஜன், மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் செங்கட்டாம்பட்டி மாணிக்கமுத்து, கணவாய் பட்டி செந்தில் கண்ணன், சேவகம் பட்டி ராஜ்குமார் மற்றும் வருவாய், மின்சாரம், வேளாண், சமூக நலம், கூட்டுறவு உள்ளிட்ட 15 துறை அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் துறை ரீதியான 1074 மனுக்களை பெற்றுக் கொண்டு உடனுக்குடன் ஆன்லைன் மூலம் பதிவு செய்தனர்.

முகாமில் திமுக நிர்வாகிகள் ஜெயராஜ், கார்த்திக், சகாப்தின், ராஜ்குமார், வழக்கறிஞர் வினோத் கண்ணா, ஆரோக்யசாமி, நாகூர், சபேஷ் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முகாம்முடிவில்வத்தலக்கு ண்டு ஊராட்சி ஒன்றிய இளநிலை உதவியாளர் நாச்சியப்பன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

### 5-வது நாளாக சிகிச்சையில் இருக்கும்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல்நிலையில் முன்னேற்றம்

சென்னை, ஜூலை 26-

ஆஞ்சியோ சிகிச்சைக்கு பிறகு 5-வது நாளாக மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தகவல வெளியாகியுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் நேற்று சுவாசத்தை சீராக்க ஆஞ்சியோ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் அவருக்கு எந்த குறைபாடும் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து மருத்துவமனையில் மேலும் சில தினங்கள் இருந்து ஓய்வெடுக்க வேண்டும் என்று டாக்டர்கள் அறிவுறுத்தினார்கள். அதன் பேரில் அப்பல்லோ மருத்துவமனையில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது.

ஆஞ்சியோ சிகிச்சைக்கு பிறகு 5-வது நாளாக மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல்நிலையில் தற்போது நல்லே முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

நேற்று காலை அவரை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், முதலமைச்சரின் சகோதரி செல்வி, சகோதரர் மு.க.தமிழரசு சந்தித்து பேசினார்கள். சபாநாயகர் அப்பாவு, அமைச்சர்கள் கே.என். நேரு, ஐ.பெரியசாமி, தா.மோ.அன்பரசன், முன்னாள் அமைச்சர் பொன்முடி, ஏ.கே.விஜயன் ஆகியோர் மருத்துவமனைக்கு சென்று நலம் விசாரித்தனர்.



சென்னை அடையாறு முகத்துவாரத்தில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் சர்வதேச சதுப்பு நில சூழல் அமைப்பு பாதுகாப்பு தின விழா-2025 முன்னிட்டு அலையாத்தி தோட்டம் எழுப்புதல் நிகழ்ச்சியினை நிதி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார். இதில் கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹூ, இயக்குநர் ஆ.ர.ராகுல்நாத் மற்றும் ஸ்ரீனிவாஸ்ரெட்டி, ராகேஷ்குமார் டோக்ரா உள்ளனர்.



சென்னை நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாகக்கூட்டரங்கில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் 2025-ம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரித்துறை செயலாளர் ஷில்பா பிரபாகர்சதீஷ், வணிகவரித்துறை ஆணையர் எஸ்.நாகராஜன், இணை ஆணையர் மொ.நா.பூங்கொடி ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் தலைமையில் தூய்மை பணியாளர்கள் நல வாரியக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, அரசு செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆணையர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, சிறப்பு செயலாளர் சு.கணேஷ், இயக்குநர் ச.அண்ணாதுரை, தூய்மை பணியாளர்கள் நல வாரிய உப தலைவர் கனிமொழி, செயல் அலுவலர் கோவிந்தராஜுலு ஆகியோர் கலந்து கொண்டனர்.




அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி, தொடர் சுற்றுப்பயணத்தின் ஒருபகுதியாக புதுக்கோட்டை மாவட்டத்தில் 2-ம் நாளாக நேற்று பிரசாரம் மேற்கொண்டார். கூடியிருந்த ஆயிரக்கணக்கான தொண்டர்கள் மத்தியில் அவர் உரையாற்றினார். அருகில் முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் உள்ளார்.

# அரசாங்கத்திற்கு மக்களின் பிரச்சனை தெரிவதில்லை: எடப்பாடி பழனிசாமி

புதுக்கோட்டை,ஜூலை26-

இந்த அரசாங்கத்திற்கு மக்களின் பிரச்சனை தெரிவதில்லை என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் இ.பி.எஸ். தெரிவித்துள்ளார்.

தி.மு.க. வாக்குறுதியின் உண்மை நிலையை மக்கள் அறிய, ரிப்போர்ட் கார்டு எனும் யோசனையை அ.தி.மு.க. கையில் எடுத்தது.

வீடு வீடாகச் சென்று கொடுக்கப்பட உள்ள ரிப்போர்ட் கார்டை இ.பி.எஸ்., வெளியிட்டார். பின்னர் புதுக்கோட்டையில் நிருபர்கள் சந்திப்பில் இ.பி.எஸ்., கூறியதாவது:

தி.மு.க. ஆட்சியில் நேர்மையான அதிகாரிகளுக்கு மரியாதை கிடையாது. போலீசாருக்கு ஏதும் பிரச்னை ஏற்பட்டால் அழைத்து பேசி சரி செய்ய வேண்டும். அதனை விட்டுவிட்டு, நேர்மையான போலீஸ் அதிகாரியை பழி வாங்குவது ஒரு நல்ல அரசுக்கு அழகு அல்ல. அ.தி.மு.க., பாஜ கூட்டணியை உடைக்க வெளியில் பேட்டி கொடுத்து கொண்டு இருக்கிறார்கள்.

இன்றைக்கும் இருக்கும் முதல்வரும், உதயநிதியும் பிரதமர் வீட்டு கதவை தட்டினார்களா?

நாங்கள் உள்துறை அமைச்சரை சந்தித்தால் தவறு. அவர் இந்திய நாட்டு உள்துறை அமைச்சர் தானே? வேறு யாரும் இல்லை. இதில் என்ன தவறு இருக்கிறது. நாங்கள் பாஜ- அ.தி.மு.க கூட்டணி. நாங்கள் நிச்சயமாக ஆட்சி அமைப்போம்.

ஒரு கட்சி என்றால் எல்லாவற்றையும் வெளிப்படுத்த முடியாது. இந்த அரசாங்கத்திற்கு மக்களின் பிரச்னை தெரிவதில்லை. மக்கள் ஆதரவு உடன் மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி அமைக்கும் போது காவிரி குண்டாறு திட்டம் தொடரும்.

இவ்வாறு இ.பி.எஸ். கூறினார்.

# பாராளுமன்றத்தை சுமூகமாக நடத்த அனைத்துக்கட்சி கூட்டத்தில் முடிவு

புதுடில்லி, ஜூலை 26-

சபாநாயகர் ஓம் பிர்லா தலைமையில் நடந்த அனைத்து கட்சிக் கூட்டத்தில், பாராளுமன்றத்தை சமூகமாக நடத்த ஒருமித்த முடிவு எடுக்கப்பட்டது.

கடந்த ஜூலை 21ம் தேதி மழைக்கால கூட்டத் தொடர் தொடங்கியது. கடந்த 5 நாட்களாகவே, அவை நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் முடக்கியுள்ளன. ஆபரேஷன் சிந்தூர், பீஹார் வாக்காளர் பட்டியல் திருத்தம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களை எழுப்பி பாராளுமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

ஆபரேஷன் சிந்தூர் குறித்து விவாதம் நடத்த மத்திய அரசு ஒப்புக் கொண்ட நிலையிலும், அவை நடவடிக்கைகள் தொடர்ந்து முடக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், பாராளுமன்றத்தை சுமூகமாக நடத்துவது குறித்து அனைத்து கட்சிக் கூட்டத்திற்கு லோக்சபா சபாநாயகர் ஓம் பிர்லா அழைப்பு விடுத்தார். அதன் பேரில் சபாநாயகர் தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கேள்வி நேரத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டது ஏமாற்றம் அளிப்பதாகவும், பார்லிமென்ட் விதிகளை கடைபிடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும், பிரச்னைகளுக்கு அமளியின் மூலம் தீர்வு காண முடியாது என்றும், பேச்சுவார்த்தை மற்றும் விவாதத்தின் மூலமே தீர்வு காண முடியும் என்று கூறினார்.

இந்த நிலையில், சபாநாயகரின் கோரிக்கையை ஏற்று, பாராளுமன்றத்தை சுமூகமாக நடத்த அனைத்துக் கட்சிகளிடையே ஒருமித்த கருத்து எட்டியுள்ளது.

இதன்மூலம், திங்கட்கிழமை முதல் பாராளுமன்றத்தில் அலுவல் பணிகள் சுமூகமாக நடக்கும் என்று தெரிகிறது.

# நீலகிரி, கோவை மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜூலை 26-

தமிழகத்தில் நீலகிரி, கோவை மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் இன்று (ஜூலை 26) மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வடக்கு வங்கக்கடல் பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், கரையை கடந்து, மேற்கு வங்க கடலோரப் பகுதியில் நிலவுகிறது. மகாராஷ்டிரா - கேரள கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் அரபிக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (ஜூலை 26) முதல் ஜூலை 31-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

வரும் 28-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்தில் வீசக்கூடும். இன்று நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலை பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தேனி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. 27-ம் தேதி நீலகிரி, கோவை மாவட்டங்களின் மலை பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் இன்று சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்திலும், இடையிடையே 60 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



சென்னை அம்பத்தூர் சர்.ராமசாமி முதலியார் மேல்நிலைப்பள்ளியில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் பயனாளிகளுக்கு அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், சு.முத்துசாமி, பி.கே.சேகர்பாபு ஆகியோர் வீட்டுமனை பட்டாகளை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் பாராளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, கா.கணபதி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றிஅழகன், ஆணையர் கே.எஸ்.பழனிச்சாமி, இயக்குநர் ராஜகோபால் சுன்கரா, மேலாண்மை இயக்குநர் ஜி.எஸ்.சமீரன், துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.